நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

புதியபூமி

சுற்று 05 ஜூன் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 20


## அணுக்குண்டு மகிழ்ச்சி

☆ இந்தியா வெடித்தது இந்துத்துவ அணுக்குண்டாம்!
இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் இது வெற்றியாம்!
அதில் தமிழர் விஞ்ஞானியாய் இருப்பது மேலும் மகிழ்ச்சியாம்!

☆ பாகிஷ்தான் வெடித்தது இஸ்லாமிய அணுகுண்டாம்!
அதனை முஸ்லிம் நாடுகளில் முதலில் வெடித்ததில் மகிழ்ச்சியாம்!
இது உலக முஸ்லீம்களுக்கு நம்பிக்கை தரும் விடயமாம்!

கோடிக்கணக்கான இந்திய–பாகிஸ்தான் மக்களுக்கு?

# அரசியல் தீர்வுப் பொதி அவல நிலையில் உள்ளது!



**இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு குறைந்தபட்சத் தீர்வு காணப்படுவதற்கும், யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை கொண்டு வருவதற்கும் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தீர்வுப் பொதி அவலமான நிலையில் இருப்பதையே காணமுடிகிறது. அதனை நிறைவேற்றவும் முடியாது கைவிடவும் முடியாத ஓர் இக்கட்டான நிலைக்குள் தீர்வுப்பொதி அகப்பட்டு நிற்கிறது.**

1995ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப் பொதி முன்வைக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அதனை மையமாக வைத்து வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று வருகிறதே தவிர அது நிறைவேற்றப்பட முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. ஜனாதிபதி தான்தோன்றும் சகல கூட்டங்கள், வைபவங்கள் அனைத்திலும் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றியும் அதனை நிறைவேற்றி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றியும் இடைவிடாது பேசி வருகின்றார். அதே போன்று அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான அமைச்சர் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிய சட்ட நுணுக்க விபரங்கள் பற்றியும் மணிக்கணக்கில் விரிவுரைகள் கொடுத்துவருகின்றார். சில அமைச்சர்கள் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசி வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்குள் உள்ள ஒரு பிரிவினர் மௌனமாக இருந்து கொண்டே அரசியல் தீர்வுக்குப் பதிலாக யுத்தத்தின் மூலம் தீர்வு காணப்படுவதையே ஆதரித்து வருகிறார்கள்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி காலை ஒரு கதையும் மாலையில் வேறொரு கதையும் பேசிக்கொண்டு காலத்தை இழுத்துச் சென்று அதிகாரத்திற்கு வந்துவிடவே முயலுகின்றது. அவர்களுக்கு அரசியல் தீர்வு பற்றி அணு அளவும் அக்கறை கிடையாது. அரசியல் அதிகாரத்தை தலைகீழாக நின்றாவது அடைந்துவிட வேண்டும் என்பதாகவே உள்ளது. அதிகாரம் மட்டுமன்றி பேரினவாத நிலைப்பாட்டில் இனப்பிரச்சினையை அணுகும் அவர்களது நோக்கில் எவ்வித மாற்றமும் இல்லை.

மேலும் அரசியல் தீர்வுப் பொதியை பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் முழுமையாக நிராகரிக்கின்றன. பௌத்த பீடங்களின் மகா நாயக்கர்கள் தீர்வுத்திட்டத்தை முற்று முழுதாகவே நிராகரித்து விட்டனர். நாட்டையும், பௌத்தத்தையும், சிங்களவர்களையும் நாசத்திற்கு உட்படுத்தும் ஓர் தீர்வுத் திட்டம் என்பதே அவர்களது நிலைப்பாடாகும். அண்மையில் மகாநாயக்கர்களின் நாடி பிடித்துப் பார்க்கச் சென்ற அமெரிக்கத் தூதுவரிடம் இதனை அவர்கள் தெளிவு படுத்தியுள்ளனர்.

மேலும் உயர்மட்ட ராணுவத் தளபதிகளின் நிலைப்பாடும் அரசியல் அல்ல யுத்தமாகவே கொள்ளப் பட்டுள்ளது. அண்மையில் இராணுவத் தளபதி வெளியிட்ட கருத்து அதனைப் புலப்படுத்துகின்றது. அத்துடன் அமெரிக்கா சமாதானத்தீர்வு பற்றிப் பேசிக் கொண்டே யுத்தத்தை விரிவாக்கும் ஆலோசனைகளையே வழங்கி களத்தில் நின்று உதவி வருகிறது.

அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர் அரசியல் தீர்வுத் திட்டத்தை ஒரு கவசமாகப் பயன்படுத்தி வருகின்றனரே தவிர அதன் உள்ளார்ந்த நோக்கம் சமாதானத்தைக் கொண்டுவருவதாகக் காணப்படவில்லை.

தமிழ்க் கட்சிகள் வெறும் எதிர் பார்ப்புகளுடன் மட்டும் குந்தி இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு சப்பை கட்டி வருகின்றன. அவர்களது சொந்த ஈடேற்றங்களை அரசாங்கம் தக்கபடி கவனித்துக் கொள்வதால் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் நாளாந்தம் யுத்தப் பேரழிவுகளால் உயிர் உடைமைகளை இழந்து அகதிகளாகத் தமது சொந்த

---12ம் பக்கம் பார்க்க

# மலையக மக்கள் புதிய பாதையில் புதிய தலைமுறையினர் முன்னணியில்

மலையக மக்கள் பழைய தொழிற்சங்கத் தலைமைகளையும், புதிது என்று கூறிக்கொண்டிருக்கும் பழையவகை தொழிற்சங்கத் தலைமைகளை நிராகரிக்கின்றனர். என்று அரசியல் மதிப்பீட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தின் தற்போதைய அரசியல் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக கொழும்பிலிருந்து மலையகப்பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்த பத்திரிகையாளர்கள் புத்திஜீவிகளை" உள்ளடக்கிய குழுவொன்றின் அறிக்கையின்படி புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்ப்பதில் மலையகத்தின் இளைய தலைமுறையினர் கூறிய அக்கறை கொண்டிருப்பதாகவும் அறிக்கை செய்துள்ளது.

தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக போராடி தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிசெய்ய திராணியில்லாத நீண்ட வரலாறுடைய, குறுகிய வரலாறுடைய எல்லா தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்கள் நிராகரிக்கின்றனர். தொடர்ந்து பேரம் பேசுதல் அரசியல் கொள்கையை அல்லது நிலைப்பாட்டை கொண்டுள்ள மலையக தொழிற்சங்கத் தலைமைகளின் வரையறையை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

இதற்கு மாறாக புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்ப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐ.தே. கட்சிக்கும் எதிரான நிலைப்பாடு முக்கிய அடிப்படையாக இருப்பதை அறிய முடிகிறது.

புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்ப்பதில் அக்கறை செலுத்திவரும் மலையகத்தின் இளம் தலை முறையினர் பலவிதமான சவால்களையும் முகம் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். அவர்கள் தொழில் செய்யும் இடங்களில் பழிவாங்கலுக்கு உட்படுகின்றனர். பயங்கரவாதிகள் என்று அவர்களின் பெயர்கள் பொலிசாரிடம் கொடுக்கப்பட்டுள்ளன. இவை போன்ற பழைய தலைமைகளின் பழிவாங்கல் நடவடிக்கைகளை துணிவாக எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக பல இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்ப்பதில் இன்னும் ஒருமுகப்பட்ட தன்மை வளர்ச்சியடையாத போதும் பன்முகப்பட்ட வழிகளில் பரவலாக மலையகமெங்கும் பழைய அரசியல் தலைமைகளுக்கு பதிலாக புதிய அரசியல் தலைமையை கட்டி வளர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இம்முயற்சிகள் ஈடுபட்டுள்ள இளைஞர்களின் பட்டி மன்றங்கள், வீதி நாடகங்கள், இசை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் அணி திரள்வதை காணமுடிகிறது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் பழைய தலைமைகளுக்கு சவாலாக போட்டியிடவுள்ள புதிய சக்திகளுக்கு தொழிலாளர்கள் பல இடங்களில் நிதியுதவிகளை செய்து வருகின்றனர். அதேவேளை எதுவித அரசியல் அடிப்படைகளும் இல்லாமல் சுயநல நோக்கில் புதிய முயற்சிகளை பாதிக்கக் கூடியவாறு போட்டியிடவுள்ள சக்திகள் குறித்தும் மலையக மக்கள் எச்சரிக்கையுடனேயே இருக்கின்றனர். அதாவது அரசியல் அடிப்படையில்லாத புற்றீசல்கள் போல் வெளிக்கிளம்பவுள்ள சுயேட்சைகள் பற்றிஅவதானமாக இருப்பதாகவே தெரிகிறது.

எனவே பதிய அரசியல் தலைமையை கட்டி வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பழைய தொழிற்சங்க தலைமைகளுக்கு மிடையில் எதிர்வரும் மாகாணசபை தேர்தல் பலப்பரீட்சையாக அமையப் போகிறது.

சம்பள உயர்வு போராட்டத்திற்கு பிறகும் சந்தா 33 ரூபாவாக உயர்த்தப் பட்ட பிறகும் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க முடியாதிருப்பதாகவும் தோட்டங், களுக்கு செல்ல முடியாதிருப்பதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத இ.தொ.காவின் தொழிற்சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

------12ம் பக்கம் பார்க்க

# திருமலை சந்தைத் திறப்பு பேரினவாதப் பிடியில்!

திருகோணமலை நகரசபை மின்சார வீதியில் நகரத்திற்கான சந்தைக் கட்டிடத்தை கூடிய வசதிகளுடன் கட்டி முடித்துள்ளது. பழைய சந்தை போதுமான வசதிகளும், சுகாதாரமின்மையும் சந்தை வடிவற்றும் இருந்த காரணத்தினால் அதற்குப் பதிலாகவே புதிய சந்தைக் கட்டிடம் தோற்றம் பெற்றது. ஆனால் அப்புதிய சந்தைக் கட்டிடத்தை திறந்து வைப்பதற்கு நகரசபையும் அதன் தலைவரும் முன்வந்த போது கடந்த வருடத்தில் தடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டும் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அதன் திறப்பு வைபவம் தடுக்கப்பட்டே வருகின்ற கதை தொடர்கிறது.

பழைய சந்தையில் ஆதிக்கமும் வியாபார முன்னுரிமையும் பெற்ற சில சிங்கள முதலாளிகள் இந்தப் புதிய சந்தையை திறக்க விடாது தடுத்து வருகிறார்கள். தமது சுயலாபத்தை மையமாகக் கொண்டு இனவாதத்தையும் பசப்பி புதிய சந்தை தமிழ் சந்தை என்றும் கூறுகிறார்கள். ஆனால் புதிய சந்தையும் மூவினத்தவர்களது வியாபாரத்திற்கு ஏற்ற வழிவகை செய்யப்பட்டிருப்பதாக நகரசபைத் தலைவர் கூறுகிறார். புதிய சந்தையைத் திறக்கவிடாது தடுப்பதில் ஒருசில சிங்கள முதலாளிகள், அரசாங்க அதிபர், பொலீஸ், ராணுவத்தினர் என்போர் மும்முரமாகச் செயலாற்றுகிறார்கள். பாதுகாப்புக் காரணமாகத் தாம் தலையிட்டு இருப்பதாக ராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கூறி புதிய சந்தையை திறக்க விடாது தடுக்கின்றனர். இவ்விடயம் சம்பந்தமாக அமைச்சர்கள் தொட்டு

------12ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# சீரான பஸ் சேவை நடத்தக் கோரி இராகலையில் மாணவர்கள்-மக்கள் ஆர்ப்பாட்டம்

மே மாதம் 5ம் திகதி காலை 7 மணியளவில் இராகலை புறாக்சைட் சந்தியில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் மக்கள் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். சுலோகங்கள் இட்டனர். இதுவரை நுவரெலியா போக்குவரத்து சபை டிப்போவிற்கும், போக்குவரத்து அமைச்சருக்கும், மாகாண அமைச்சருக்கும் மனுக்கள், மகஜர்கள் அனுப்பி பயனற்ற நிலையிலேயே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர் இறங்கினர். இராகலையில் இருந்து ஹைபோரஸ்ட், மாகுடுகல, ரில்லாமுல்ல, கோணக்கல, பிரம்லி, அல்மா சீட்டன், அல்மா கிறேற்மண்ட, விபாரிக்கல கோணப்பிட்டிய போன்ற இடங்களுக்கான 25 மைல் நீளமுள்ள வீதியில் பஸ் போக்குவரத்து மிக மோசமானதாகும். இதனை எதிர்த்தே அதிக பஸ்களை சீரான முறையில் சேவையில் விடக்கோரியே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

> தோட்டப்புறக் கல்வியை மேம் படுத்துவதாக வாய்கிழியக் கத்தும் அமைச்சரும் அதிகாரிகளும் இக்கொடுமையைத் தடுத்து நிறுத்தி ஆவன செய்யாது பாராமுகமாக இருப்பதேன்

மேற்படி இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் ஆசிரியர் உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலையை மேற்படி பஸ் இல்லாமை ஏற்படுத்தியுள்ளது. ஒரே ஒரு பஸ் அதுவும் சீராக இன்றி ஏனோதானோ என்றே சேவையில் விடப்படுகின்றது. இ.போ.ச. பஸ் கட்டணம் ஆகக் கூடியது ஆறு ரூபா. ஆனால் இதே பாதையில் ஓடும் தனியார் பஸ்கள் பத்து ரூபாவில் இருந்து இருபது ரூபா வரை அறிவிடுகிறார்கள். சிறிய அவ் பஸ்களில் அடைஅடையென அடையவைத்து மாணவர்களை மூச்சுத்திணற வைத்து விடுவார்கள். எங்கே இறங்கினாலும் ஒரே காசுதான் அறவிடுகிறார்கள். இப்போக்குவரத்து கொடுமையால் மாணவர் கல்வி பாழாகி வருகின்றது. ஆசிரியர், மாணவர் பிந்தி வருவதும் சில வேளைகளில் வராமல் விடுவதும் இடம் பெறுகின்றது. பொறுக்க முடியாத ஆசிரியர், மாணவர் பல மைல் தூரம் கால்நடையாகவே களைத்து விழுந்து பாடசாலை சென்றடைகிறார்கள்.தோட்டப்புறக்

கல்வியை மேம் படுத்துவதாக வாய்கிழியக் கத்தும் அமைச்சரும் அதிகாரிகளும் இக்கொடுமையைத் தடுத்து நிறுத்தி ஆவன செய்யாது பாராமுகமாக இருப்பதேன். இவ் ஆர்ப்பாட்டம் அவர்களது காதுகளுக்கு எட்டியிருக்கும். எதிர்வரும் மாகாணசபைக்கு எடுபிடிகளுடன் வரட்டும் என்றே அப்பிரதேச மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எதிர்பார்த்திருக் கின்றனர். இது போன்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களால் தான் அநீதிகளையும், அக்கறையீனங் களையும் தட்டிக் கேட்டு எமக்குரிய உரிமைகளைப் பெற இயலும். இவ் ஆர்ப்பாட்டத்தை சகல இனமத மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் இணைந்து நடாத்தியமை வரவேற்கத்தக்கதாகும்.

--பச்சையப்பன்--

# வவுனியாவில் காலியாகிவரும் குளத்து நீர்

வன்னி நாட்டின் வளம் இங்குள்ள குளங்களிலே தங்கி இருக்கிறது. இதுபற்றிய உணர்வின்றி அறிவின்றி மக்களும் ஏன் அதிகாரிகளும் கூட செயல்பட்டு வருவது கவலைக்குரியதாக இருக்கின்றது.

கடந்த ஆண்டில் பெய்த பெரும்மழையின் காரணமாக குளங்கள் நிரம்பி வழிந்து ஓடின. விவசாயிகள் சிறுபோகம் கூட விதைக்கலாம் என சந்தோசப்பட்டனர். ஆனால் சிறுபோக நெற்செய்கையை நிறுத்தும் படி அரச அதிபரால் பலபகுதிகளில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதனால் பல குளங்களில் தேக்கப்பட்ட நீர் பிரயோசனமின்றி திறந்து விடப்பட்டுள்ளது. இது மாத்திர மல்லாமல் பாதுகாப்பு நலன்களுக்காகவும் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இவ்வருடம் நாட்டின் வரட்சி அதிகரித்து இருக்கின்றது. இதனால் நீர் வற்றிச் செல்வதும் விரைவாகியுள்ளது. இன்னும் பருவமழை பெய்தற்கு இயற்கை பொய்க்காது விட்டால் ஆறு மாதங்கள் இருக்கின்றன. வரப்போகும் ஆறுமாதங்களுக்கும் போதியளவு நிர் சேமிப்பு உண்டா என்ற கேள்வியை எழுப்பி விடைகாண சம்பந்தப் பட்டவர்கள் தவறியுள்ளனர்.

அது நிற்க நீர் திறந்து விடப்படுவதற்கு விடப்பட்ட காரணம் குள திருத்த வேலைகள் தான் எனக் கூறப்படுகிறது. தற்போது திருத்தா விட்டால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிவிடும் எனப் பயங் காட்டுகிறார்கள். நடைபெறும் திருத்த வேலைகட்கும் நீர் திறந்து விடுவதற்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாக தெரியவில்லை.

மேலும் அதிகாரம் உள்ளவர்களின் அனுசரணை உள்ளவர்கள் தமது மானாவாரி நிலங்களுக்கு முறையற்ற வகையில் குளக்கதவைப் பெயர்த்து நீர்ப்பாய்ச்சுவதும் இடம் பெறாமல் இல்லை.

குளங்கள் நீர்வற்றி இருக்கும் ஆடி ஆவணி மாதங்களில் வேலையை தொடக்கி முடித்திருப்பதன் மூலம் நீரைக் கூடிய காலத்துக்குச் சேமித்து வைத்திருக்க முடியும். அல்லது குறிப்பிடக்கூடிய அளவில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தி இருக்க முடியும். ஆனால் அப்படி நடக்க வில்லை. இதனால் வரட்சியைத்தான் நாம் எதிர்நோக்க முடியும்.

தூர நோக்கமற்ற செயல்திட்டங்களின் மூலம் மக்களுக்கு இழப்புகள் மென்மேலும் அதிகமாகி வருவதையே எதிர்பார்க்க முடியும். வருங்காலங் களிலாவது பொறுப்பானவர்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். பொது மக்களும் விழிப்புடன் இருந்து தங்களின் ஆதரவையும் ஆட்சேபனையையும் விடயத்திற்கு ஏற்றாற்போல செய்ய வேண்டும். இதற்கு பொது நிறுவனங்கள் மன்றங்களும் செயற்பட வேண்டும். இல்லாது விடின் மக்களின் மீது குதிரை விடுவோர் குதூகலமாகத் தமது செயல்களைத் தொடரவே செய்வார்கள்.

குகன்
வவுனியா

# சார்ள்ஸ் அபேசேகர

## GOD FATHER OF NGO's

அரச சார்பற்ற நிறுவனமான மேர்ஜ் இயக்கத்தின் ஸ்தாபகர் சார்ள்ஸ் அபேசேகரவின் மறைவு பற்றி ஏறக்குறைய ஒரே கருத்தை பலரும் பல விதமான சொற்றொடர்களைப் பாவித்து தெரிவித்துள்ளனர். அவரை சமாதானத்தின் சின்னமென்றும் பீஷ்மன் என்றும் அழைத்திருந்தாலும் அவர் ஒரு இனவாதியல்ல என்பதே சொல்ல முற்பட்ட கருத்தாகும்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏகாதிபத்திய முதாளித்துவ நலன் களை பாதுகாக்கும் அடிப்படை களைக் கொண்டனவாகவே இருக்கின்றன. அவற்றினூடே மூன்றாம் உலக நாடுகளில் பிற்போக்கு தனங்கள் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனுக்கு மனிதன் எவ்வித எதிர் பார்ப்புமின்றி செய்யப்படும் சேவைகள் சம்பளத்திற்காக செய்யப்படுகின்றன. இதனால் எதிர்பார்ப்பற்ற மனிதாபிமான உதவிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படுகின்றன.

அடிப்படையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் வளர அவர் முக்கியமானவராவார். அவர் இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் முழுமுதற் கடவுள் அல்லது God Father of NGO's என்று அழைக்கப்பட்டார் என்பதை எடுத்துக்கூற எல்லோருமே மறந்து விட்டார்கள்.

இனப்பிரச்சினையில் நடுநிலை வகிப்பதாகவும் தமிழ் மக்களின் நண்பனாக காட்டிக்கொண்ட அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பம்மாத்து பேச்சு வார்த்தைக் குழுவில் ஒருவராக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் சென்றார் என்பதையும் பலர் மறந்துவிட்டனர்.

# நாலு நடக்கும் உலகிலே

## பாட்டும் பரதமும் பாட்டாளி வர்க்கமும்

தொழிலாளர்களது போராட்ட உணர்வின் அடையாளம் மேதினம். அந்த உணர்வையும் பாட்டாளி வர்க்க ஒற்றுமையையும் மறுக்கும் விதமாகவே சிலரால் மேதினம் ஒரு கேளிக்கை நாளாக்கப்பட்டு வந்துள்ளது. இதில் 1977க்குப் பின்பு யூ.என்.பி. அரசு இந்தியச் சினிமாப் பாடகர்களையும் நடிகர்களையும் வரவழைத்து நடத்திய கோமாளிக் கூத்து குறிப்பிட வேண்டியது. அதில் தொண்டமானுடைய தரகுப் பணியின் பங்கும் முக்கியமானது. அவரது கட்சியின் மேதினக் கூட்டங்களிலும் இத்தகைய கேளிக்கைகள் நடைபெறுவதை அறிவோம்.

இப்போது மலையகத்தில் உள்ளவர்கட்குப் பரதநாட்டியமும் கர்நாடக இசையும் கற்பிக்கும் ஒரு பணி பற்றித் தொண்டமான் ஆர்வம் காட்டுகிறார். மக்களுடைய வாழ்வுடன் நெருக்கமான கலை இலக்கியப் பணிகள் மக்களது அரசியல் உணர்வை வளர்த்துவிடும். எனவே சமகால வாழ்விினின்று அந்நியப்பட்டு நிற்கிற கலைகள் ஆபத்தற்றவை என்று நினைக்கலாம். மலையக மக்கள் என்றாவது அவற்றைத் தமது போராட்டத்திற்கு உகந்த கருவிகளாகப் புனையும் ஆற்றல் இல்லாதவர்கள் என்றும் அவர் நினைத்திருக்கலாம். அண்மைக்கால நிகழ்வுகள் தொண்டமானின் மதிப்பீடுகளைப் பொய்ப்பித்து வந்துள்ளன என்பது நினைவில் வைக்கத்தக்கது.

## திடீர் கலவி

இந்தியாவில் இருந்து 500 ஆசிரியர்களை வரவழைத்து மலையகத்தில் விஞ்ஞானக் கல்விக்கான ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முயற்சி பற்றி வெகுவாகப் பேசப்படுகிறது. தமிழகத்துக் கல்விமுறை, அவர்கள் பயன்படுத்தும் கலைச்சொற்கள், கல்வி பயிற்றும் முறை போன்றன நம்முடையவற்றிலிருந்து வேறுபட்டவை. அதுபோக, குறுகிய கால உடன்படிக்கைகளில் இங்கு வரும் ஆசிரியர்கட்குப் பாடசாலையுடனும் அதனைச் சார்ந்த சமுதாயத்துடனும் அதிகம் ஒட்டுதல் இருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர்கள் ஒரு இலட்சியத்தால் உந்தப்பட்டு இங்கு வரவில்லை.

மலையகக் கல்வியின் பிரச்சினை பெரிது. தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்துதல், பிற பாடசாலை வசதிகளை விரிவாக்கல் ஆசிரிய பயிற்சி போன்றன பற்றி மலையக மக்களிடம் வாக்குகள் பெற்றுப் பாராளுமன்றம் போனவர்கள் இத்தனை காலமும் எவ்வளவு செய்துள்ளனர்?

1956ல் ஸ்ரீ.ல.சு. கட்சி ஆட்சி ஏற்பட்டபோது, முஸ்லிம் ஆசிரியர்கள் போதாமையை முன்னிட்டு, ஆசிரியர் தெரிவில் முஸ்லிம்கட்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. மலையக மக்களுக்கும் அது போன்ற சலுகைகளும் ஊக்குவிப்பும் தேவை. திடீர் தோசை, திடீர் சாம்பார், மாதிரிக் கல்விக்குத் திடீர் ஆசிரியர்கள் வந்து பிரச்சினை தீர்ந்து விடாது.

## பூ வியாபாரம்

வெண்தாமரை இயக்கம் சிங்கள மக்கள் மத்தியில் போருக்கு நியாயம் கற்பிக்கும் இயக்கமாகவே உருவாக்கப்பட்டது. அந்த வியாபாரம் படுத்து விடும் தறுவாயில் சமசமாஜக்கட்சி தனது பூ வியாபாரத்தை தொடங்கிவிட்டது. கடை விரிக்கு முன்பே பூக்கள் கருகிவிட்டன.

இடதுசாரி இயக்கத்திற்கும் குறிப்பாக சமசமாஜக் கட்சிக்கும் சூரியகாந்தி இயக்கம் முக்கியமானது. அது பிரித்தானிய ஆட்சியாளர் தமது இளைப்பாறிய படைவீரர்கட்காக பொப்பிப் பூக்களை விற்று நிதி திரட்டியதற்கு எதிரான ஒரு முற்போக்கு இயக்கம். இன்றைய இயக்கம் சமாதானத்தின் பெயரில் போருக்குச் சப்பைக்கட்டு கட்டுகிற இயக்கம். ஏதோ பழைய நினைவுகளைக் கிளறிக் கட்சிக்கு உயிரூட்டலாம் என்று எதிர்பார்த்துக் கடைசியில் அந்தப் பழைய நினைவுகட்கு அவமரியாதை செய்துவிட்டார்கள்.

## ஒரு போராளியும் பொறுக்கிகளும்

கம்போடியாவின் இரண்டு விடுதலைப் போர்களிலும் தலைமை தாங்கி நின்ற பொல்பொட்டின் மரணத்தின் பின்பு பல பத்திரிகைகளிலும் வந்த கட்டுரைகளும் செய்தி அறிக்கைகளும் ஒரு சர்வாதிகாரி கொலைகாரன் என்றவிதமாகவே பொல்பொட்டை வர்ணித்திருந்தன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அதன் பின்பு வியற்நாம் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வென்ற கதையை எவருமே கூறத் தவறியது ஏன்? பொல்பொட்டின் தவறுகளை மிகைப்படுத்தி அவரை ஹிற்லருடன் ஒப்பிட முனைவது ஏன்? முதலாளிய ஏடுகள் வேறென்ன செய்யும். ஆனால் செங்கொடி உயர்த்துகிற சிலரும் இதே விதமாக நடந்து கொள்வது ஏன்?

## பத்திரிகா தருமம்

கொழும்பில் நடந்த அரசாங்கச்சார்பற்ற இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய மேதினம் மிகவும் சிறப்பாக நடந்தது. ஆயினும் செய்தி ஏடுகள் அதை அறவே புறக்கணித்து விட்டன. இவ்வாறே வடக்கில் அரசாங்க ஆதரவாளர்களது மேதின நிகழ்வுகளைவிடச் சிறப்பான முறையில் நடந்த புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினம் பற்றிய செய்தியும் மறைக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றி வாய் கிழியப் பேசுவோர் அந்தச் சுதந்திரம் பத்திரிகை முதலாளிகள் கையில் எதற்காகப் பயன்படுகிறது என்று கவனித்துக் குரல் கொடுக்க வேண்டாமா?

## சந்தைப் பேச்சு

திருகோணமலையிற் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்ட சந்தைக் கட்டடத்தை மே 19க்குள் திறந்து வைக்காவிட்டால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என்று நகரசபையினர் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். ஆயினும் திறக்க விடாமல் தடுப்பதற்கு சிங்கள இனவாதிகளும், அரச படையினரும் சகலதும் செய்கிறார்கள்.

'அண்ணன்' காட்டிய வழியில்ஆயுதமேந்திய போராட்டம் தமிழீழம் என்று முழங்கி வந்த நபர்கள் 'தந்தை' வகுத்த சாத்வீக வழியில் போராடுவதாகப் பேசுகிறார்கள். அவர்கள் அன்று பேசினார்கள் இவர்கள் இன்று பேசுகிறார்கள். அரசாங்கங்கள் மட்டும் அதிகம் பேசாமல் திருகோணமலையைத் திட்டமிட்ட முறையில் சிங்கள மயமாக்கிக் கொண்டு வருகின்றன.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## ஒன்றிணைவதற்கான காலமும் தேவையும்

அரசாங்கம் பதவிக்கு வந்து நான்கு வருடங்களைத் தொடப் போகிறது. தீர்வுப்பொதி இறக்கப்பட்டு மூன்று வருடங்கள் ஆகப் போகிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழு எழுபத்தியேழு தடவை கூடிக் குலைந்து பேசிக் களைத்த நிலை. எது வரினும் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவது என அரசாங்கம் சபதம் ஏற்றது. இன்னும் மேடைகள் தோறும் தீர்வு காணப்படும் என்றே குரல் கொடுக்கப்படுகிறது. ஆனால் எப்படி? எப்பொழுது? எத்தகையவற்றை உள்ளடக்கிய தீர்வு என்பது தெளிவாகவில்லை.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கலங்கிய குளத்தில் மீன் பிடிக்க முயலுகிறது. ஒரு புறத்தில் பேரினவாதிகளுக்கு தலையைக் காட்டுகிறார்கள். தமிழ் மக்களுக்கு வாலைக் காட்டுகிறார்கள். மாற்றுத் தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதாகக் கூறி பழையதைக் கொதப்பித்து புதியதெனக் காட்டி காலத்தை இழுத்தடித்து வருகிறார்கள். அவர்களுக்கு அடுத்த ஆட்சியதிகாரக் கதிரை ஒன்றே குறிக்கோள். அதனால் தமிழ் மக்களையும் ஒருவாறு அணைத்துச் செல்ல வேண்டும் என்பதால் அவர்களுக்காக அழுது புலம்புவதும் இடைக்கிடை கேட்க முடிகிறது. குறிப்பாக மலையகத்தில் விழுந்து விழுந்து வேலை செய்கிறார்கள். வாக்குறுதிகளை வழங்கி தோட்டம் தோட்டமாகப் பிரசாரத்தில் இறங்கி மாகாண சபைத் தேர்தலில் தமது மலையகச் செல்வாக்கை உயர்த்திக் காட்ட பெரும் முயற்சியில் இறங்க உள்ளனர். ஆனால் பச்சை நரியின் பாசாங்கு மலையக மக்களுக்கு விளங்காத ஒன்றல்ல.

தணிக்கை

தமிழர் கூட்டணியும் தமிழர் கட்சிகளும் என்ன செய்கிறார்கள். இப்படி தமிழ் மக்கள் கேள்வி கேட்கிறார்கள் அவர்களிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை. ஒருவரை ஒருவர் குறைகூறி எதிர்த்து வீதியில் இறங்கி சச்சரவுப் படுகிறார்கள். அரசாங்கத்திற்கு வெவ்வேறு நிலைகளில் நின்று ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

இவற்றின் மத்தியில் அமெரிக்கா புகுந்து தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க இடதுசாரியினரைத்தவிர வேறுயாரும் குரல் வைக்கவில்லை. மக்களுக்கு அதன் ஆபத்து புரிகிறது. ஆனால் மக்களுக்கு முன்பாக நிற்பவர்கள் அதைப் பற்றி அக்கறை காட்டவில்லை. எல்லாம் தத்தமது நலன்கள் கருதியேயாகும்.

எனவே யுத்தத்தை நிறுத்து. விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொள் நியாயமான அரசியல் தீர்வுக்கான அடிப்படைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தி விரைவான இணக்கப்பாட்டிற்கு அரசாங்கம் வரவேண்டும் என்பதை சிங்கள மக்கள் வற்புறுத்த வேண்டும். வீதியில் இறங்கி நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும். அதே வேளை தமிழர் அமைப்புகள் யாவும் ஒன்று பட்டு தமது நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழர் அமைப்புகள் யாவும் ஒன்றுபட்டு தமது நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழர் அமைப்புகளும் ஐக்கியத்தையும், ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணய உரிமைக்கான தமிழர் அபிலாசைகளுக்கு முகம் கொடுத்தல் வேண்டும். இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்படும் காலமும் தேவையும் இன்று எழுந்துள்ளது. இவை சகல முனைகளிலும் உணரப்படுவது அவசியம்.

--ஆசிரியர் குழு--

## வாக்குறுதிகளுக்காக வாக்களிப்பதை மறப்போம்

**ம. அழகேசன்**

1977ஆம் ஆண்டு டெவனில் சிவனு லெட்சுமணன் சுட்டுக் கொல்லப் பட்டதை எதிர்த்து ஊர்வலம் சென்ற அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்து அட்டன் வட்டாரத் தொழிலாளர்கள் அட்டன் நகருக்கு திரண்டு சென்றனர். பாதிக்கபட்ட மாணவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை செய்தனர். தாக்கப்பட்ட மாணவர்கள் ஒதுங்குவதற்கு கூட தங்கள் கடைகளில் இடம் கொடுக்கக் கூடிய துணிவுடன் அன்று அட்டன் வியாபாரிகள் இருக்கவில்லை. புதிய செங்கொடிச்சங்க காரியாலயமும், டாக்டர் தம்பிராஜாவின் வைத்திய சாலையுமே தாக்கப்பட்ட மாணவர்களுக்காக துணிவுடன் திறக்கப்பட்டிருந்தன.

ஆனால் கடந்த 20 வருடகால அனுபவத்தினால் அட்டன் வியாபாரிகளால் மட்டுமன்றி மலையக நகர வியாபாரிகளாலும் தொழிலாளர்கள் அல்லாத ஏனை பிரிவினராலும் தொழிலாளர்களின் போராட்டப் பாதையில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற உண்மை உணரப்பட்டுள்ளது. இது வரவேற்கக் கூடிய அரசியல் வளர்ச்சி ஆகும்.

சம்பள உயர்வு கோரி இவ்வருடம் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் களின் வேலை நிறுத்தப் போரட்டத்திற்கு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தெரிவித்து அட்டன் நகர வியாபாரிகள் மட்டுமன்றி பல மலையக நகர வியாபாரிகளும் ஊர்வலங்களை நடத்தியுள்ளனர். அதே போன்று நகர வியாபாரிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நகர வியாபாரிகளுக்கு கிடைத்து வருகின்றன. இதற்கு ஆதாரமாக பல சம்பவங்களை குறிப்பிடலாம்.

மத்திய தர வர்க்கம் என்ற எண்ணத்தின் வளர்ச்சியினால் தோட்டத் தொழிலாளர்களிலிருந்து அந்நியப்படுகின்ற வழமையான நிலைமைக்கு மாறாக தொழிலாளர் களின் போராட்டப் பாதையில் தங்களையும் இணைத்துக் கொள்ளும் வளர்ச்சி மலையக வியாபாரிகளிடமும் ஏனையவர்களிடம் காணப்படுகிறது. அவர்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் மேற்படி வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் இதனை ஒரு திருப்பு முனையாக கொள்ள முடியும்.

இ.தொ.கா. வில் பலர் எம். பீக்களாக தெரிவு செய்யப்பட்ட போதும், தொண்டமான் அமைச்சராக இருந்த போதும், சந்திரசேகரன் பிரதியமைச்சராக இருந்த போதும் சிலர் மாகாணசபை உறுப்பினர்களாகவும், மாகாணசபை அமைச்சர்களாகவும் பிரதேசசபை உறுப்பினர்களாகவும் இருந்த போதும் அப்பதவிகளால் மலையக மக்களின் அடிப்படை தேசிய அபிலாஷைகள் பூர்த்தி செய்ய முடியாது என்பது அனுபவ ரீதியாக உணரப்பட்டுள்ளது.

இந்த அனுபவ ரீதியான அறிவு மேலும் வளர்ச்சியடைந்து சரியான திசையில் செல்லல் வேண்டும். இந்த அனுபவ அறிவின் மூலம் இன்னும் ஒரு இ.தொ.கா.வையோ, ம.ம. முன்னணியையோ, இன்னும் ஒரு தொண்டமானையோ, சந்திரசேகரனையோ வளர்ப்பதற்கு அடித்தளம் இடப்படுமானால் அதுவும் தோல்வியையே தழுவும். இந்த அனுபவ ரீதியான அறிவு சரியாக வளர்த்தெடுக்கப்படுகிறதா என்பதை ஒவ்வொரு அரசியல் நிகழ்வுகளிலும் எடுக்கப்படும் நிலைப்பாட்டிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலே மிகவும் குறுகிய காலத்தில் அடுத்து இடம்பெறவுள்ள அரசியல் நிகழ்வாகும். அந்நிகழ்வில் மலையக வியாபாரிகள் உட்பட மத்தியதர வர்க்க எண்ணத்தால் பாதிக்கப்பட்ட மலையகத்தவர்களும் எடுக்கப் போகின்ற நிலைப்பாடு முக்கியமானதாகவே இருக்கும். தொழிலாளர்களின் போராட்டப் பாதைக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க முன்வந்துள்ளவர்கள் மாகாணசபை தேர்தலில் தொழிலாளர்களின் போராட்டப்பாதையை மழுங்கடிக்கும் நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது என்பதே தொழிலாளர்களின் விருப்பமாகும்.

பழைய இ.தொ.கா. வினதும் ஏனைய தொழிற்சங்கங்களினதும் புதிய புழுகு மூட்டைகளையும் நம்பிவிட முடியாது. அதே போன்று வழமையாக மாகாணசபை தேர்தல்களை எதிர்கொண்டது போன்று தனிப்பட்ட லாபங்களையும், பட்டம் பதவிகளையும் எதிர்பார்த்து இம்முறை மாகாணசபை தேர்தலை எதிர்நோக்க முடியாது.

மலையகத்தில் ஆட்களைப் பிடித்து பச்சை நிறத் தோரணங்களை கட்டி மலையக மக்களை ஏய்க்கும் ஐ. தே. கட்சியின் முயற்சிகளை கண்டு மலைக்க வேண்டியதில்லை. அம்முயற்சிகளால் தனது மக்கள் விரோத நிலைப்பாட்டில் எவ்வித மாற்றத்தையும் ஐ.தே. கட்சி ஏற்படுத்தாது. அதனை ஆதரித்தால் மலையக மக்கள் பெரும்பான்மை இன மரத்தில் படர்ந்த கொடிகளே என்பதை ஏற்றுக் கொள்வதாகவே அமையும். அதைவிட எந்தவித முன்னேற்றமான இடமும் மலையக மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக மலையக மக்களையும் புதிய போராட்டப் பாதையில் அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களின்பால் கவனத்தை திருப்புவது நல்லது. அவர்களுடன் ஐக்கியப்பட்டு எதிர்வரும் மாகாணசபை தேர்தலை எதிர் கொள்வதே சிறந்த அணுகு முறையாக இருக்கும்.

வெறுமனே வாக்குறுதிகளுக்காக வாக்களித்த இறந்த காலத்தை மறக்க வேண்டியதுதான் சிறந்த செயலாக இருக்கும்.

## அன்று மேயர் துரையப்பா இன்று முதல்வர் சரோஜினி! யார் துரோகி? யார் தியாகி?

கடந்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் இனம் தெரியாதவர்களினால் அவரது யாழ். இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார். இது ஒரு அரசியல் படுகொலையாகும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்தின் மீது தொடரப்பட்டு வந்த படுகொலைத் தொடரில் இது அண்மையில் இடம் பெற்ற ஒன்றாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலுக்குப்பின் இடம் பெற்றுள்ள குறிப்பான படுகொலையாக இதைக் கருதலாம். அரசியல் படுகொலைகள் மிகவும் கண்டித்து நிராகரிக்கப்பட வேண்டியவை என்பதில் எவ்வித தயக்கமும் இருக்க முடியாது. அரசியல் கருத்துகொள்கை அவ்வக் கட்சிகளின் நடைமுறை என்பனவற்றை கருத்துக்களினால் கொள்கை விளக்கங்களால் பிரச்சாரங்களினால் முட்டி மோத வைப்பதே நியாயமானதாகும். அதற்குப் பதிலாக ஆயுதங்களின் மூலம் படுகொலைகளின் வழியாக ஒருவரது கருத்தை ஒரு கட்சியின் செயல் பாட்டை இல்லாமல் செய்யலாம் என்பது இயலாத காரியம். ஏனெனில் அத்தகைய வழிமுறைகளை மக்கள் ஏற்பதில்லை. அதனால் படுகொலை வழிமுறைகள் நீடித்த பலாபலன் களைத் தரப்போவதில்லை. எவர் எக்கொலையைச் செய்தாலும் அவர்களுக்கு அது பலவீனமும் பின்னடைவுமேயாகும்.

யாழ் மாநகர முதல்வர் திருமதி. சரோஜினி படுகொலை யாழ்ப்பாணத்தில் இரண்டாவது முதல்வர் படு கொலையாகும். முதலாவது படுகொலை 1976ம் ஆண்டில் அன்றைய யாழ் மாநகர முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பா மீது நிகழ்த்தப்பட்டது.

அல்பிரட் துரையப்பா யாழ் முதல்வராகப் பதவி வகித்த பின் யாழ்ப்பாணத் தொகுதியின் சுயேட்சை உறுப்பினராகத் தெரிவு பெற்றவர். பின்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் இணைந்து கொண்டவர். அதற்காக தமிழரசு–கூட்டணித் தலைவர்களால் தமிழ்த் துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் துரோகிகள் பட்டியலில் அன்று சேர்க்கப்பட்டனர். வட்டுக்கோட்டையின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தியாகராஜாவும் படுகொலை செய்யப்பட்டார். அருளம்பலம் படுகொலை முயற்சியில் இருந்து தப்பிக் கொண்டார். இவை எல்லாம் பழைய வரலாறு.

ஆனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நின்றதால் துரையப்பா துரோகி எனக் கணிக்கப்பட்டமை முற்றிலும் ஒரு சரியான கணிப்பீடாக இருக்க முடியுமா என்பதை காலம் கடந்தாவது இன்றைய நிலையில் தமிழர் கூட்டணித் தலைமைப் பீடம் மறு மதிப்பீடு செய்யுமா? சரோஜினியைத் தியாகி எனக் கூறியுள்ள தமிழர் கூட்டணி துரையப்பாவிற்கு கொடுத்த துரோகிப் பட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுமா? யார் தியாகி? யார் துரோகி? என்பதை சுயநலன்களில் இருந்து தீர்மானிக்க முடியாது. வரலாறுதான் அதனைத் தீர்மானிக்க வேண்டும். கூட்டணித் தலைவர்கள் இதனை உணர்வார்களா?

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்துப் பண்ணையார்

இந்தியாவில் இன்றும் பண்ணையார்மாரின் ஆதிக்கம் வலுவுடையது. அரசியலிலும் அவர்களது பிடி செல்வாக்கு செலுத்தும் ஒன்று. இன்றைய சினிமாவில் அவற்றின் வாழ்நிலையை அவதானிக்கக் கூடியது. இலங்கையில் அத்தகைய பண்ணையார்முறை இல்லாவிடினும் நிலவுடமை வழிவந்த ஆதிக்கப்பிடி, சாதியப்பிடி நிலை அமைவில் காணக்கூடியது. சிங்கள ஆளும் அரசியலில் வளவுடையோரின் செல்வாக்கு முதன்மையானது. ஐக்கிய தேசியக் கட்சிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலும் இந்த வளவுக்காரரின் ஆதிக்கப் பிடி அன்றும் இன்றும் முன்னுரிமையுடன் திகழ்கிறது. தமிழர் அரசியலிலும் நிலவுடமை ஆதிக்க சக்திகளே முதன்மைக்கு உரியவர்கள்.

மலையக தொழிற்சங்க அரசியலை எடுத்து நோக்கின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்னும் தொழிற்சங்க நிறுவனம் சக்தி மிக்கதாக இருந்து வநதுள்ளது. அமைச்சராக இருக்கும் திரு. தொண்டமான் அறுபது வருடத்திற்கு மேற்பட்ட தொழிற்சங்க அரசியல் அனுபவம் பெற்றவர் எனக் கூறப்படுபவர். அத்தகைய தலைவர் ஏறத்தாள இந்திய பண்ணையார் போன்ற நிலையிலேயே இருந்து வந்துள்ளார். அவரிடம் குவிந்துள்ள சொத்துக்களும் சுகங்களும் அவரினதும் அவரது குடும்பத்தினரதும் நடைமுறைகள் யாவும் இந்தியப் பண்ணையார்கள் போன்றே காணப்படுபவையாகும்.

இந்தப் பண்ணையார் தனத்தில் தொழிற்சங்க அரசியல் என்பது இதுவரை அவரை மலையகத் தலைவராகவும் தொழிற்சங்கத் தலைவ்ராகவும் கண்டு வந்தது. மலையக மக்களும் அவரது தோற்றம் அளித்த மாயையில் சிக்கியவர்களாக இருந்து வந்தனர். ஆனால் இது அண்மைய ஆண்டுகளில் அதிகரித்த சரிவையே கண்டு வருகின்றன. இச் சரிவு திரு. தொண்டமான் அவர்களுக்கு தாங்கிக் கொள்ள இயலாத ஒன்றாகி நிற்கிறது.

இந்தியப் பண்ணையார் ஒருவர் தனது இறுதிக் காலத்தில் தனது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து அவர்களில் மூத்த ஆண் வாரிசை சின்னப் பண்ணையாராக்கிக் கொள்வார்கள். அவர்கள் சகலதையும் கவனித்து தந்தையாரின் இடத்தை நிரப்பிக் கொள்வார்கள். அதே போன்று மலையக மண்ணிலே ஒரு சின்னப்பண்ணையாரை உருவாக்கி அவருக்கு தொழிற்சங்க அரசியல் சித்து விளையாட்டின் நுட்பங்களை எல்லாம் கற்றுக் கொடுத்து விட்டுச் செல்வதில் திரு. தொண்டமான் கடுமையான முயற்சிகளைச் செய்து வந்தார். இ.தொ.கா. வில் சின்னப் பண்ணையாரின் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கக் கூடிய சகலரையும் உதைத்து வெளியே தள்ளிக் கொண்டார். கேள்வி கேட்காத பணிவுடையோரை முன்னுக்கு கொண்டு வந்தார். அவரை இ.தொ.கா. வின் பொதுச் செயலாளராகவும் ஆக்கிக் கொண்டார். தான் கண்களை மூடிக் கொள்ளும் போது தனது பெரிய பண்ணையார் இடத்தை சின்னப் பண்ணையார் எடுத்துக் கொள்ளுவதற்குரிய சகலதையும் செய்த கொண்டார்.

ஆனால் இவை யாவற்றையும் கச்சிதமாகச் செய்து கொண்ட போதிலும் மலையக மக்கள் மத்தியில் குறிப்பாகத் தொழிலாளர்களிடையே கடுமையான அதிருப்தியும் எதிர்ப்பும் தோன்றி வளர்ந்து கொண்டே செல்வது திரு. தொண்டமானுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. எங்கு பார்த்தாலும் விமர்சனப் பேச்சுக்களும் கண்டன ஏச்சுக்களாகவுமே காணப்படுகின்றது. அண்மைய மேதினக் கூட்டத்தில் பண்ணையாரினதும் சின்னப் பண்ணையாரினதும் பேச்சுக்களை அவதானித்த போது மலையக மக்கள் மீதான அவர்களது கோபம் பிரதிபலித்தது. மலையக மக்கள் மீது பரம்பரை பரம்பரையாகக் குதிரைச் சவாரி விடலாம் என்று எண்ணி வந்த இவர்களுக்கு இன்று பெரும் ஏமாற்றமே தொடர்ந்து கிடைத்து வருகின்றது. மலையக மக்கள் புதுத்திசை நோக்கிப் பயணம் ஆரம்பித்து விட்டதையே இது எடுத்துக் காட்டுகிறது.

# போக்கும் வரத்தும் யாருக்கு லாபம்?

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் பிற இடங்களுக்குச் செல்வது இரு வேறு நாடுகளுக்குச் செல்லும் நடைமுறைகளை ஒத்ததாகும். நாட்டை ஒன்றுபடுத்திவிட்டதாக அரசாங்கம் பெருமை பேசுகிறது. ஆனால் கொழும்பு-யாழ்ப்பாண பயண நடைமுறைகளும் பயணமும் இரண்டு நாடுகள் என்ற உணர்வையே தருகின்றன.

இவை ஒருபுறம் இருக்க ஒருவர் அங்கிருந்து இங்கு வரவும் இங்கிருந்து அங்கு போகவும் படும் சிரமங்கள் வர்ணிக்க முடியாதவையாகும். கடல் பயணத்திற்காக மாதக்கணக்கில் திருகோணமலையில் மக்கள் தவம் இருக்க வேண்டியுள்ளது. பின்பு ஏதாவது சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் நடத்தினால் மட்டுமே ஒரு முறை அல்லது இரு முறை கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படும். அங்கும் அகதிகள் என்போருக்கு இலவசமாகவும் ஏனையோருக்கு அறுநூறு முதல் ஆயிரம் ரூபாய் வரை கட்டணம் அறவீடு செய்யப்படும்.

அதேவேளை கொழும்பு-பலாலி விமான சேவை விஸ்தரிக்கப்பட்டு இரண்டு விமான சேவை நிறுவனங்கள் நான்கு சேவைகளை நடத்துகின்றன. இவ் விமானப் பயணத்தில் ஒரு கொள்ளை காசு அறவிடப்படுகிறது. தனி வழி பயணத்திற்கு ஐயாயிரத்து ஐநூறும் கறக்கப்படுகிறது. கடல் பயணத்தை நிறுத்தி ஆகாய மார்க்கத்தை விஸ்தரித்துக் கொண்டதில் பணம் பண்ணுதலே முக்கிய காரணமாகி உள்ளது. அண்மையில் தொடங்கப்பட்ட மற்றொரு விமான சேவையில் அரசாங்கததின் முக்கிய அமைச்சர் ஒருவரது மகனுக்கு மிகப் பெரிய பங்கு இருப்பதாகவும் அது நேரடியாக அன்றி வேறுவேறு பெயர்களுக்கு ஊடாக நடைபெற்றிருப்பதாகவும் செய்திகள்

---7ம் பக்கம் பார்க்க

# பாதாள உலகமும்! பாராளுமன்ற அரசியலும்!

பாதாள உலகத்தினரைக் கண்டு பிடித்து சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருமாறு ஜனாதிபதி அண்மையில் பொலீஸ் தலைமைப் பீடத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதைத் தொடர்ந்து பொலீஸ் மா அதிபர் அத்தகைய நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டதுடன் பாதாள உலகத்தவர்களை உரியவாறு கண்டு பிடிக்கத் தவறியமைக்காக சில பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் திடீர் இடமாற்றம் செய்யப் பட்டதாகவும் அறிய முடிகிறது. அதே வேளை தற்போதைய அரசாங்கத்தின் மிக உயர்நிலை அரசியல்வாதி ஒருவருக்கு மிக நெருக்கமாக இருந்த பாதாள உலகப் பேர்வழியை கைது செய்தமைக்காக ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் ஆங்கில் வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

பாதாள உலகத்தவர் என்போர் யார்? அவர்கள் எப்படி உருவானார்கள்? அவர்களது பாத்திரம் என்ன? என்பவை மிகமுக்கிய கேள்விகளாகும். பாதாள உலகத்தினர் விலைக்கு கொலை செய்வோர், கொலைக்குத் திட்டமிடுவோர், போதைவஸ்து கடத்தி விநியோகித்து விற்பனை செய்வோர், கொள்ளையர்கள், சூதாட்டம் நடத்துவோர், விபச்சார விடுதிகள் இயக்குவோர், கசிப்புக் குகைகளை வைத்திருப்போர், கள்ளக் கடத்தல்கள் புரிவோர், அடியாட்களை கொண்டிருப்போர், ஊர்-தெருச் சண்டியர்கள் போன்ற அனைத்துப் பிரிவினரும் பாதாள உலகத்தின் உறுப்பினர்கள். இவர்கள் ஏறத்தாள ஒவ்வொரு தலைவனின் கீழும் நிறுவனமாகி உள்ளனர். அவர்களது தொடர்புகள், நடமாட்டங்கள், அன்றாட அலுவல்கள் யாவும் நவீன வலைப்பின்னல் வடிவில் செயல்படுகின்றன. நவீன தொடர்பு சாதனங்கள் தொட்டு நவீன ஆயுதங்கள் வரை உயர்தரவீடு வாசல்கள் முதல் குளிரூட்டப்பட்ட காரியாலயங்கள் வரை இவர்களால் அனுபவிக்கப் படுகின்றன.

அன்றைய பதினேழு வருடகால இருண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இப் பாதாள உலகத்தினர் சகல சௌபாக்கியங்களுடனும் வளர்ந்து கொளுத்தனர். ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பின்னால் சக்திமிக்க பாதாள உலகக் கோஷ்டிகள் இருந்து வந்தன. இவர்கள் பொலீஸ் அதிகாரிகள், அரசாங்க உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்போருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். அதன் விளைவாக இனம் காட்டாத கொலைகள், அடாவடித்தனங்கள், காணாமல் போதல், வேலை நிறுத்தங்களை முறியடித்தல், ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை காடைத்தனத்தால் சீர்குலைத்தல் என்பவற்றின் மூலமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. கொலைகளும், புதைகுழிகளும், பிணவாடையும், சித்திரவதைகளும், மிரட்டல்களும் கொடிகட்டிப் பறந்தன.

இன்றைய ஆட்சி வந்ததும் பல ஆணைக்குழுக்கள் நடாத்திய விசாரணைகளில் இப்பாதாள உலகத்தவரது பல்வேறு தொழிற்பாடுகள் வெளியே அம்பலத்துக்கு வந்தன. ஆனால் அவர்களது செயல்பாடுகள் முடிவுக்கு வரவில்லை. தொடர்ந்தும் அவர்களின் ஆதிக்கம் நிலை பெற்றதாகவே காணப்படுகிறது. அம்பலமாகிய பேர்வழிகள் தமது செயற்பாடுகளை மாற்றிக் கொண்டு புதிய வகைகளில் வெளிக்காட்டாது செய்து வருகிறார்கள்.

அதே வேளை புதிய புதிய பாதாள உலகத்தவர்கள் முன்னுக்கு வந்துள்ளனர். அவர்களது வருகைக்கும், வளர்ச்சிக்கும் இன்றைய அரசாங்கத்தின் உயர்நிலை அரசியல் புள்ளிகள் ஆதரவும் அரவணைப்பும் வழங்கி வருகின்றனர். அண்மையில் வெளிவந்த செய்திகள் சில முக்கிய பாதாளக் கோஷ்டிகளின் தலைவர்களை அரசாங்கக் கட்சியினரே பாதுகாப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இருப்பதில் அதிக ஆச்சரியம் இருக்க முடியாது ஏனெனில் முதலாளித்துவப் பாராளுமன்ற அரசியலில் அவர்களது பங்களிப்பு எப்பொழுதும் முதலாளித்துவக் கட்சிகளுக்கு அவசியமானதாகும். அவர்களது பலம் மக்கள் செல்வாக்கில் அன்றி இதுபோன்ற கும்பல்களின் பலத்திலேயே தங்கி நிற்பதாகும். இன்றைய சமூக அமைப்பின் பொருளாதார அரசியல் சமூக நெருக்கடிகள் தீவிரம் அதிகரிக்க அதிகரிக்க ஆளும் அரசாங்கங்களுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் பாதாள உலகத்தவரது தேவை தவிர்க்கவியலாத ஒன்றாகி விடுகிறது. எவ்வளவிற்கு ஜனநாயகம் பேசினாலும் நடைமுறையில் பாதாள உலகத்தவரது உதவியுடனேயே முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலில் வல்லாதிக்கம் செலுத்த முடியும். இது முன்பு அப்பட்டமாக நடந்தேறியது. இன்று மிக நாசூக்காகவும் மறைவாகவும் செயற்படுகிறது. பேச்சுக்கள் யாவும் வெறும் பம்மாத்துக்களே.

# சிறைச்சாலை பூஞ்சோலை அல்ல!

'சிறைச்சாலை பூஞ்சோலை' 'துப்பாக்கிக் குண்டு விளையாடும் பந்து' 'தூக்கு மேடை பஞ்சு மெத்தை' இவற்றை முழக்கங்களாக்கி அன்று முழங்க வைத்தவர்கள் தமிழரசுக் கட்சியினர். அறுபதுகளின் ஆரம்பத்தில் இடம் பெற்ற சத்தியாக்கிரக காலத்தில் மாணவர்கள் தொட்டு வயதானவர்கள் வரை முழங்கிக் கொண்டு சத்தியாக்கிரக இடமான கச்சேரிகள் நோக்கிச் சென்றனர். ஆனால் அந்த முழக்கங்கள் வெறும் இன உணர்வுக் கோஷங்களாகி காலகதியில் அர்த்தமற்றுப் போனது மட்டுமன்றி இன்று அதற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதவர்கள் போன்று சாந்தி சமாதானம் நட்புறவு பேசி வருகிறார்கள் கூட்டணியினர். அன்று கனல்பறக்க சிங்கள ஏகாதிபத்தியம் எனக்கூறப்பட்ட மண்ணிலே அவர்களுடன் ஒன்றிணைந்து கைகூசாச் செயல்களையும், வாய்கூசாச் சொற்களையும் செய்தும் சொல்லியும் வருகிறார்கள்.

ஆனால் தமிழர்களின் நிலை பரிதாபத்தின் மேல் பரிதாபமாகிக் கொண்டு செல்கிறது. நாடு முழுவதிலும் அவர்களின் மீதான ஒடுக்குமுறை என்றுமில்லாத அளவுக்கு எல்லை கடந்து சென்று கொண்டிருக்கிறது. தலைநகரில் அதன் தாக்கம் பாரியதாகும். இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம் என்றுரைத்தார் பாரதி அன்று. இன்று வனவாசத்திற்கு அனுப்பிய பிள்ளைகளோடும் உறவினரோடும் தொடர்பு கொள்ளவும் மேலும் வனவாசத்திற்கு அனுப்பி வைக்கவும் பெருந் தொகையான தமிழர் தலைநகரில் வந்து குவிந்து படும் வேதனைகள் ஊர் உலகு அறிந்ததேயாகும். அவர்களுக்கு மட்டுமன்றி தமிழில் பெயர் உள்ள அனைவருமே பொலிஸ் நிலையம் சிறைச்சாலை நீதிமன்றம் புகுந்து மீள வேண்டியது நியதியாகி விட்டது.

பொலிஸ் நிலையங்களும் சிறைச்சாலைகளும் நரகத்திற்கு ஒப்பானது என்பார்கள். அப்படியான அந்த இடங்கள் இன்று தமிழர்களுக்கு நரகத்தின் மேல் நரகமாகிக் கிடக்கிறது. பாதாள உலகத்தாரின் பல்வகை அடாவடித்தனங்கள் ஒரு புறம் சிறை அதிகாரிகளின் பேரினவாத வெறித்தனம் மறுபுறமாக தமிழர்களை வதைத்து எடுத்த வண்ணம் இருக்கின்றது. மனிதாபிமானம் மனித உரிமை யாவும் அங்கே துரும்பிற்கும் கிடையாது.

சிறைச்சாலை என்பதன் அடிப்படை அர்த்தத்தையும் இவ்வேளை புரிந்து கொள்ளல் வேண்டும். அரசு வேறு அரசாங்கம் வேறு என்பது கண்டு கொள்ளப்பட்டால் அரசு யந்திரத்தின் பிரதான பகுதியாகவே சிறைச்சாலையும் நீதிமன்றமும் திகழ்கின்றது. அவற்றை பாதுகாப்பது ஆயுதப்படைகள். ஆதலால் துப்பாக்கி பிரதான இடத்தை வகிக்கிறது. அதனால் தான் அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழலில் இருந்து பிறக்கிறது என்றார் மாஓ. ஒடுக்குமுறை யந்திரமான அரசு யந்திரம் சொத்துடைய ஆளும் வர்க்கத்தின் பிரதான கருவி. அதனை முறையாக நிர்வகிக்கிறது அரசாங்கம். அரசாங்கத்தில் ஆட்களும் கட்சிகளும் மாறுவார்கள். அரசு யந்திரம் மாற்றமடைவதில்லை. இதை உணர்ந்தே அரசு யந்திரத்தை மாற்றியமைக்க தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும் என மாக்சிசம் புரட்சிகர அறைகூவல் விடுத்தது.

ஆதலால் இன்றைய சிறைச்சாலை அவலங்களும் பொலிஸ் நிலையச் சித்திரவதைகளும் அடிப்படை வர்க்க அரசியலைக் கொண்டது. அது தமிழர்களுக்கு எதிரானதாக இன்று செயற்படினும் அடிப்படையில் சிங்கள மக்களுக்கும் அநீதியும் அடக்குமுறையும் இழைப்பதாகும். இவற்றுக்கெதிரான குரல்கள் எழுப்பப்படுவதுடன் மட்டும் விடயங்கள் நின்று விடமாட்டாது. தமிழ் மக்கள் உட்பட அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகும் மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று போராடும் நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். அவ்விடத்தை நோக்கி சகல மக்களும் முன் செல்ல வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக வாக்கு வேட்டையில் ஐக்கிய தேசியக் கட்சி மும்முரம்

## எப்படியும் வாக்குகள் பெற்றால் போதுமாம்!

இப்போதெல்லாம் தோட்டம் தோட்டமாக பச்சைக் கட்சிக்காரர்கள் வந்து தோட்ட இளைஞர்களுடன் கைகுலுக்கி கதைக்கின்றனர். மாகாண சபை தேர்தலில் யானை சின்னத்திற்கு வாக்களிக்கும்படியும் கேட்கிறார்கள்.

இளைஞர்களின் பிரச்சினை பற்றி மிகவும் அக்கறையுடன் தற்போது கதைக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மலையக இளைஞர்கள் பற்றி உண்மையான அக்கறையிருந்திருப்பின் அவர் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தபோது பல பிரச்சினைகளை தீர்த்திருக்கலாம். அப்போதெல்லாம் கண்ணுக்கு தெரியாத மலையக இளைஞர்கள் தற்போதுதான் தென்படத் தொடங்கியுள்ளனர் என்பது பற்றி மலையக மக்கள் சிந்திக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராக இருந்த போதுதான் லயன் காம்பிராக்களை' சொந்தமாக்கித் தருவதாக நுவரெலியாவில் வைத்து 'உறுதிகளை' கொடுத்தார். அவரது உறுதியின் போலித்தன்மை பற்றி மலையக மக்கள் மறந்துவிடவில்லை. அத்தகையவர் இப்போது மலையக மக்களின் குடியிருப்புகள் பற்றி மிகவும் கவலைப்படுகிறார்.

இவரைவிட இன்னொரு புத்திரன் பச்சைக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்து மக்களிடையே வருகிறார். அவர் மத்திய மாகாண சபையிலே முக்கிய புள்ளியாக இருந்து வருபவர். தமிழர் அவர் மலையக மக்களின் கலாசாரத்தை பாதுகாப்பதாக கங்கணம் கட்டிக் கொண்டு நிகழ்ச்சிகளை அரங்கேற்றி வருகிறார். அவருக்கு தேசிய இனம் என்றால் என்னவென்று தெரியுமோ நாமறியோம். ஆனால் மலையக மக்கள் தேசிய இனம் என்று கூறுகிறார். பரவாயில்லை என்றாலும் இன்னொரு தேசிய இனமான தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்தான யாழ்ப்பாண நூல்நிலையத்தை அவரின் "குருவானவர்" தலைமையில் தீக்கிரையாக்கப்பட்டபோது அவரும் யாழ்ப்பாணத்தில் குருவானவருடன் இருந்தார். குருவானவருக்கு ஒத்தாசை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொருவரும் ஐக்கிய தேசிய கட்சிக்காகப் பேசிக்கொண்டு வருகிறார். தனது கையிலிருந்த கல்வியை விடுதலை செய்து விட்டு ஒரு பிரதேச அரசியலுக்கு பொறுப்பாகி விட்டார். அவர் பிரசாரம் செய்துவரும் போது தோட்ட இளைஞர் ஒருவரால் உதிர்க்கப்பட்ட 'முத்துக்கள் சிலவற்றை இங்கு ஒப்புவிக்கலாம்.

"ஆசிரியர் பதவிக்காக நான் தேர்ந்தெடுக்கப்பட கணிதபாடத்தில் சித்தியடைந்திருக்கவில்லை. யோசித்துக் கொண்டிருந்த போது 'என்ன ஐசே இதற்கெல்லாம் யோசிக்காதே எட்டு ஆயிரம் கொடு நான் ஒங்க ஸ்கூல் பிரன்சிபால் தந்தமாதிரி கையெழுத்திட்டு சர்ட்டிபிக்கட்டும் தாறேன் டிப்பார்ட்மென்டில் எல்லா வேலைகளையும் ஒழுங்கு செய்கிறேன். நானும் நம்பி காசையும் கொடுத்து சர்ட்டிபிக்கட்டை டிப்பார்ட்மென்டுக்கு அனுப்பினேன் நியமனம் கிடைத்தது. ஒரு வருடத்திற்கு பிறகு பரீட்சை திணைக்களத்திலிருந்து ஒரிஜினல் சர்ட்டிபிக்கேட்டை எடுத்து அனுப்பும்படி கடிதம் வந்தது. நான் அவரிடம் ஓடினேன் இப்ப ஒன்றுமே செய்ய ஏலாது. வேலையை விட்டிடு என்று கையை விரித்து விட்டார். நான் வேலையை விட்டுட்டன். எனக்கு எதிராக கல்வி அமைச்சு சட்ட நடவடிக்கை எடுக்குமோன்னு அஞ்சி அஞ்சி செத்துக்கிட்டிருக்கிறேன். இப்படி பல பேர்.

அப்பவே பல பேர் சொன்னாங்க பம்மாத்துகளுக்கு ஏமாந்து விடாதீங்க இன்னொருமுறை பரீட்சை எழுதி பாஸ் பண்ணுங்க கள்ள சர்ட்டிபிக்கட் கொடுத்தா பெரிய பிரச்சினை வருமுனு சொன்னாங்க.

அது சரியாவே போச்சு இப்ப மாட்டிக்கிட்டேன்."

இப்படிப்பட்ட அந்த கல்விக் கனவான் மாகாணசபை தேர்தலில் போட்டியிடப் போகிறேன் என்று மக்களின் முன் வந்திருக்கிறார். அவர் யார் என்று எல்லோருக்கும் தெரியாமல் இல்லை. இவ்வாறு பணத்திற்காக நம்ம இளைஞர்களையே ஏமாத்தும் இவர்களைப் போன்றவர்கள் தான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த மலையக மக்களுக்கு 'சேவை' செய்யத் துடிக்கிறார்கள்.

இதைவிட எதிரும் புதிருமாக கட்சிகளுக்கு மாறி மாறி ஆதரவு வழங்குவதில் சாதனை படைத்த செல்வமானவரும் இப்போது பச்சைக்கு மிகவும் செல்லப்பிள்ளையாக மாறிவிட்டார். அவரது தொழிற்சங்கத்தினூடாக பச்சைக்கே ஆதரவு வழங்குவதென முடிவெடுத்துள்ளாராம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்க தொழிலாளர்களின் தேசிய சங்கமும் தருணம் பார்த்துக் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

அன்று பதினேழு வருடங்களாக இ.தொ.காவுடன் இணைந்திருந்து ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி மலையகத்திற்கு செய்ய மறுத்து வந்தவற்றை இனிமேல் எப்படி செய்து தரப் போகிறது. வேடம் போட்டு ஏமாத்துறத்திற்கு ஒரு அளவாவது வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை நொந்து பயன் இல்லை. நாம எப்படியும் வோட்டு எடுத்து தந்திடுவோம் என வரிந்து கட்டி நிற்கும் மலையகப் பச்சைக் காரங்களைத் தான் நாலு கேள்வி கேட்க வேண்டியுள்ளது.

# குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்



- ☆ குடாநாட்டில் கூடாரம் அடித்து நிலைமைகளை நேரில் விரிவாகக் கண்டறிந்த சர்வோதயத் தலைவர் திரு. ஆரியரட்ணா கொழும்பு திரும்பினார். ஜனாதிபதியைச் சந்தித்து பேசியுள்ளதாகவும் செய்தி. அவர் சேகரித்த புள்ளி விபரங்கள், தகவல்கள், புகைப்படங்கள் அவருக்கு மிகப் பெறுமதிமிக்கவையாகும். அவற்றின் மூலம் தனது அரசசார்பற்ற தொண்டர் நிறுவனமான சர்வோதயத்திற்கு வெளிநாடுகளில் பணம் கறந்து கொள்ள நல்ல தீனியாகும். குடாநாடு யார் யாரை எல்லாம் எப்படி எப்படி வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.
- ☆ குடாநாட்டுக்கு வருகை தந்த ஐ.நா. விசேட தூதரிடம் இனப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட வேண்டும் என பிரமுகர்கள், அறிவு ஜீவிகள் வற்புறுத்தினார்கள். ஐ.நா. என்றால் அமெரிக்கா. அமெரிக்கா என்றால் ஐ.நா. என்பதைப் புரிந்து கொண்டுதான் இப்படி வற்புறுத்தினார்களா? முன்பு இந்தியாவிற்கு அழைப்பு விட்டு பின்பு பட்ட பாட்டை மறந்து விட்டார்களா?
- ☆ யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பன்முக வரவுசெலவு திட்டநிதி நாலு கோடியாகும். இந்நிதியை எப்படி? எங்கே? எவரது சிபார்சில் செலவிடப்போகிறார்கள் என்பதே பிரச்சினை. இதில் அரசாங்கத் தலையீடு, அரசியல் கட்சிகளின் தலையீடு, தனிநபர் செல்வாக்கு, பிரதேச-பகுதிப் பாகுபாடு, இடைத்தரகு ஏப்பம் போன்றன எந்தளவிற்கு இருக்கப் போகிறது என்பதே பிரச்சினை.
- ☆ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்க மொனோரா எயர் விமான சேவை ரூபா 20 அறவிடுகிறது. இவர்கள்தான் பொருட்கள் ஏற்றி இறக்கவும் விளம்பரம் செய்கிறார்கள். பணம் பண்ண வழி தெரிந்தவர்களுக்கு இதெல்லாம் சாதாரணமே. ஆனால் மக்கள் தான் பாவம். கடல்வழிப் பிரயாணம் தொடர்ந்தும் தடுக்கப்படுவதில் காரணம் இல்லாமல் இல்லை.

# ஜே. வி. பியும் ஐக்கிய முன்னணியும்

ஜே.வி.பி. என அழைக்கப்படும் 'மக்கள் விடுதலை முன்னணிக்கு அரசியல் வரலாறு கால் நூற்றாண்டைத் தாண்டியுள்ளது. அது தன்னை ஒரு புரட்சிகர இடதுசாரி அரசியல் சக்தி எனக் கூறிக்கொண்டே அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்தது. இளைஞர்களை மையமாகக் கொண்ட ஆயுதம் தாங்கிய புரட்சி எனக் கூறி 1971ல் ஓர் கிளர்ச்சியில் ஈடுபட்டு தோல்வி கண்டதுடன் கணிசமான இளைஞர்களை அரசு யந்திரத்துக்குப் பலியாக்கியும் கொண்டது.

சோஷலிசத்தைக் கொண்டு வருவதே தனது குறிக்கோள் எனக் கூறிக் கொண்ட ஜே.வி.பி. 77க்குப் பின் பகிரங்க பாராளுமன்ற அரசியலில் பங்கு கொண்டது. அதிலும் அதனால் வெற்றிபெற இயலவில்லை. 1988–89 காலப் பகுதியில் மீண்டும் ஆயுத நடவடிக்கைகளில் இறங்கியதுடன் அதன் தவறான கொள்கை தந்திரோபாயங்கள் காரணமாக மீண்டும் அரசு யந்திரத்தின் கொடிய அடக்கு முறைகளுக்கு பல்லாயிரம் இளைஞர் யுவதிகளை இரையாக்கியது. அதன் தலைவர் ரோகண விஜயவீர உட்பட முக்கிய தலைவர்கள் அழித்தொழிக்கப்பட வழி கோலியது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் வரவோடு ஜே.வி.பி. தன்னை மீண்டும் பகிரங்க பாராளுமன்ற அரசியலில் நிலை நிறுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வரத்தொடங்கியது. மாக்ஸ் ஏங்கல்ஸ் லெனின் ஆகியோருடன் மாக்கிசத்தை மட்டுப்படுத்திக் கொண்டுள்ள ஜே.வி.பி. சோஷலிசத்தை வென்றெடுப்பது என்றும் இளைஞர்கள் தான் முக்கிய மானவர்கள் என்பதையும் வற்புறுத்தி பழைய பாணியிலேயே தன்னை மீளமைப்புச் செய்து வருகின்றது. ரோகண விஜயவீர தலைமையில் இருந்தபோது பின்பற்றிய கொள்கை கோட்பாடுகளே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது. ஜே.வி.பியிடம் பல்வேறு வகைசார்ந்த கொள்கை கோட்பாட்டு நடைமுறைத் தந்திரோபாயத் தவறுகள் மலிந்திருந்தன. தான் மட்டுமே ஒரே ஒரு இடதுசாரிக் கட்சி என்றும் ஐக்கிய முன்னணி தேவையற்றது என்பதும் அதன் நீண்டநாளைய நிலைப்பாடு. ஜனநாயக மத்தியத்துவமற்ற கட்சி அதிகாரத்துவமும் ஏனை இடதுசாரி சக்திகளை வன்மத்துடன் புறமொதுக்குவதும் அதன் நடைமுறை. மலையக தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பிரதிநிதிகள் என்பது ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். அதே போன்று தேசிய இனப்பிரச்சனை என்ற ஒன்று இல்லை என்பதும் சோஷலிசத்தை வென்றெடுத்தால் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்பதும் அதனது அடிப்படைக் கொள்கையாகும்.

இதன் அடிப்படையிலே அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதியை மரணப்பொறி எனப்பிரசாரம் செய்த வருகிறது. இதனால் ஜே.வி.பியை சிவப்பு இனவாத அமைப்பு என அரசியல் அவதானிகள் மதிப்பிடவும் செய்தனர். இனப்பிரச்சினை, யுத்தம், அரசியல்தீர்வு என்பவற்றில் ஜே.வி.பியின் குரல் பேரினவாத சக்திகளது குரல்களோடு ஒத்து ஒலிப்பதை அவதானிக்க முடிகிறது.

இந் நிலையிலே அண்மையில் பத்திரிகைகளில் ஜே.வி.பி. ஒரு பரந்த இடதுசாரி முன்னணியை அமைக்க இருப்பதாகவும் அதற்கான பேச்சுவார்த்தையில் அது ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய இடதுசாரி முன்னணியில் உள்ள கட்சிகள் சிலவற்றுடன் ஜே.வி.பி. பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளது. எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான ஒரு தந்திரோபாய காய் நகர்த்தலை ஜே.வி.பி செய்கிறதா? அல்லது தனது தனிமைப்பட்டுள்ள சூழலை மாற்றிக்கொள்ள தற்காலிக முயற்சியில் இறங்கியுள்ளதா?

ஜே.வி.பி. இந்நாட்டின் நேர்மையான ஒரு இடதுசாரி சக்தி என்பதை நிருபணம் செய்வதற்கு அது நிறையச் செய்ய வேண்டியுள்ளது. அதன் முதல் அம்சமாக தனது கடந்த காலக் கொள்கைகள் நடைமுறைகள் பற்றிய சுய விமர்சனத்தை ஏனைய இடதுசாரி சக்திகளுடன் பகிர்ந்த கொள்ளல் வேண்டும். தன்னிடம் இனவாதம் இல்லை என்பதை தெளிவுபடுத்தும் வகையில் தேசிய இனப்பிரச்சினை, யுத்தம், அரசியல் தீர்வு என்பனவற்றில் தெளிவான கொள்கையை பகிரங்கமாக முன் வைத்தல் வேண்டும். இதன்மூலம் மட்டுமே ஜே.வி.பி. ஒரு பரந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியில் தனது இருப்பை உறுதி செய்து கொள்ள முடியும். இன்று நாட்டில் நேர்மையானதும் பரந்ததும் பலமானதுமான ஓர் இடதுசாரி சக்திகளது ஐக்கியத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்பார்ப்புக்கு ஜே.வி.பி. இணங்கி இறங்கி வந்து கொள்ளுமா? என்பதே பலரது கேள்வியாகும்.

-குணா-

நன்றி - நூலகத்திட்டம்



# வட அயர்லாந்து

## புயலும் அமைதியும்

வட அயர்லாந்துச் சமாதான உடன்படிக்கை தொடர்பாக உலகெங்கும் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை அந்த உடன்படிக்கை தரும் பாடங்களை எல்லாம் தமது வசதிக்கேற்பத் திரித்துக் கூறும் போக்குகளையும் நாம் காணலாம். வட அயர்லாந்தின் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்றே பிரித்தானிய ஆட்சியாளர்கள் கடந்த மூன்று பத்தாண்டுக் காலமாகக் கூறிவந்துள்ளனர். இது ஏதோ 1960களின் பிற்பகுதியிற் தொடங்கிப் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவான ஒரு பிரச்சனை என்ற விதமான வியாக்கியானங்கள் பலவும் ஐரிஷ் விடுதலைப் படை (ஐ.ஆர்.ஏ.) ஒரு பயங்கரவாத சக்தி, ஷின்∴பெய்ன் (நமது தனித்துவம்) அதன் அரசியற் கரம் என்ற அடிப்படையில் பிரச்சினையை விளக்க முற்படுகின்றன. இந்த அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய ஒப்பீடுகள் சில நடக்கின்றன. எனவே ஐரிஷ் தேசிய விடுதலைப் பிரச்சனையின் தொடர்ச்சியாகவும் ஒரு அரைகுறையானதும் நீதி யற்றதுமான ஒரு தீர்வின் விளைவானதாகவும் வட அயர்லாந்தின் பிரச்சினையை விளங்கிக் கொள்வதன் அவசியத்தை இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது.

பிரித்தானிய கொலனித்துவத்தின் முதலாவது முக்கியமான கொலனியாக 12ம் நூற்றாண்டு முதல் அயர்லாந்து இருந்து வந்தது. பிரித்தானியரால் ஐரிஷ் மக்களது நிலங்கள் பறிக்கப்பட்டன. 16ம் நூற்றாண்டளவில் பிரிட்டனில் கத்தோலிக்க மதத்தின் சரிவும் புரொட்டஸ்தாந்து மதத்தின் தோற்றமும் கத்தோலிக்கப் பெரும்பான்மையைக் கொண்ட அயர்லாந்தின் மக்களை மேலும் அடிமையாக்கியது. திட்டமிட்ட விதமான அடக்குமுறை மூலம் ஐரிஷ் மக்களது தாய்மொழி 19ம் நூற்றாண்டிலேயே வழக்கொழிந்து போகுமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சொத்துக்கள் யாவுமே பிரித்தானிய நிலவுடமை யாளரதும் புரட்டஸ்தாந்துக்கு மதம் மாறிய ஐரிஸ்காரர், குடியேற்றப்பட்ட ஸ்கொட்லாந்து புரட்டஸ்தாந்து மதத்தவர் மத்தியிலிருந்த நிலவுடைமைக்காரர்கட்கும் உடைமையாயின. கத்தோலிக்க மக்கள் பன்றிகளை விட கேவலமாக நடத்தப்பட்டனர். இதன் காரணமாகவும் நாட்டில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தாலும் ஐரிஷ் மக்களில் பலர் வட அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர். கணிசமானோர் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றனர். இன்றும் கூடப் பலர் கூலி உழைப்புக்காக இங்கிலாந்தில் தங்கியுள்ளனர்.

ஐரிஷ் மக்களது விடுதலை எழுச்சிகள் பலவும் முளையிலேயே கருக்கப்பட்டன. அதற்கான படைபலமும் பணபலமும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்தது. ஆயினும் இருநூறு ஆண்டுகள் முன்னம் 1793ல் தொடங்கிய போராட்டம் ஒரு பெரிய வெகுஜன விடுதலை இயக்கமாக விரிந்தது. இந்த விடுதலைப் போராட்டத்தைக் கம்யூனிஸ்ட் சிந்தனையின் முதல்வரான மாக்ஸ் உறுதியாக ஆதரித்தது மட்டுமன்றி, ஐரிஷ் மக்களது விடுதலை இல்லாது பிரித்தானிய தொழிலாளி வர்க்கத்துக்கு விடுதலை இல்லை என்று விளக்கி, பிரித்தானிய தொழிலாளி வர்க்கம் ஐரிஷ் விடுதலையை ஆதரிக்க வேண்டிய தேவையை மிகவும் வலியுறுத்தினார். உலகின் முற்போக்கான புரட்சிகர சக்திகளது ஆதரவைப் பெற்ற இந்த விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவது உறுதி என்பது தெளிவாகிய காலகட்டத்தில் பிரித்தானிய ஏகாதிபத்திய எசமானர்கள் தமது வழமையான குள்ளநரித்தனத்தைப் பயன்படுத்தினர். 1910ல் அயர்லாந்துக்கு பிரித்தானிய முடியாட்சிக்கு உட்பட்ட சுயாட்சியை வழங்குவதாக பிரித்தானிய அரசு முன்வைத்த அதேவேளை பிரித்தானிய எசமானர்களால் தூண்டிவிடப்பட்ட புரட்டஸ்தாந்து தலைவர்கள் கத்தோலிக்கர்கட்கும் சுயாட்சிக்கும் எதிராகத்திரும்பினர். சுயாட்சி முயற்சி கைவிடப்பட்டது. 1916ல் விடுதலைப் போராட்டம் உக்கிரமானது. முதலாம் உலகப் போரின் பின்பு ஏகாதிபத்திய நாடுகளது பலவீனமும் அதையொட்டிய சோவியத் யூனியனின் தோற்றமும் உலகின் பல விடுதலைப் போராட்டங் கட்குப் புத்துணர்வு ஊட்டின. 1919ல் ஷின்∴பெய்ன் இயக்கத்தினது வழிகாட்டலில் அதன் ஆயுதமேந்திய விடுதலைப்படையான ஐ.ஆர்.ஏ. யின் போராட்டத்தினூடு ஐரிஷ் மக்கள் சார்பில் ஒரு பாராளுமன்றம் உருவாக் கப்பட்டது. இதனால் சினங் கொண்ட பிரித்தானிய அரச பயங்கரவாதப் படைகள் அயர்லாந்தின் பல நகரங்களைத் தீயிட்டனர்.

பிரித்தானியர் மூட்டிய தீயின் விளைவாக விடுதலைத் தீ மேலும் கொழுந்து விட்டு எரிந்தது. எனவே 1921ல் அயர்லாந்துக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு பிரித்தானிய எசமானர்கள் உடன்பட வேண்டி வந்தது. கொலனி எசமானத்துவம் என்றுமே தானாகப் பாடங்களைக் கற்பதில்லை. எனவே ஐரிஷ் விடுதலையும் ஒரு சிக்கலை உண்டாக்கி தன்னைத்தானே ஒரு புதிய வலையில் மாட்டிக் கொண்டது. புரட்டஸ்தாந்த மதத்தவர்களைப் பெரும்பாலோராகக் கொண்ட பகுதிகளை இணைத்து அயர்லாந்தின் வடபகுதியில் அல்ஸ்ற்றர் என்ற பேரில் ஒரு மாகாணத்தை உருவாக்கி அதைத் தமது ஆட்சிக்கு கீழ் வைத்துக் கொண்டனர். மிகுதியைச் சுதந்திர அயர்லாந்தாக ஏற்றனர்.

ஐரிஷ் விடுதலை இயக்கத்தினர் எவருமே கொள்கையளவில் இந்தப் பிரிவினையை ஏற்கவில்லை. ஆயினும் பெரும்பாலானோர் இதை ஒரு தற்காலிகமான தீர்வாக ஏற்க உடன்பட்டனர். இதன்விளைவாக ஐரிஷ் விடுதலை இயக்கம் பெரும் பிளவொன்றைச் சந்தித்தது. இந்த அரைகுறையான ஐரிஷ் விடுதலையை ஏற்க மறுத்தோர் அரசாங்கத்திற் பங்கேற்க மறுத்து முன்னேற்பாடான ஐரிஷ் விடுதலைப் படை என்ற பேரில் இயங்கினர். இந்த இயக்கம் நாளடைவில் பலவீனப்பட்டு வந்தது. இதன் பிரதானமான ஓர்பகுதியே இன்றும் ஐ.ஆர்.ஏ. என அறியப்படுகிறது. இதைவிட வேறு தீவிர இயக்கங்களும் உள்ளன. இந்த இயக்கங்கள் மறுபடியும் வலிவுடன் செயற்படுவதற்கான சூழ்நிலை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தாலும் அதன் செல்லப்பிள்ளையான வசதி படைத்த புரட்டஸ்தாந்து மதத்தவர்களாலும் மதத் தலைவர்களாலும் உருவாக்கப்பட்டது.

கத்தோலிக்க மக்களை நான்கிலொரு பங்கினராகக் கொண்ட வட அயர்லாந்தில் அவர்கட்கெதிரான பாகுபாடு மிகுதியாகக் காண்பிக்கப் பட்டது. இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த கத்தோலிக்க ஐரிஷ் மக்கள் கூடக் கடந்த சில தசாப்தங்களில் கறுப்பு கிறித்தவர்களான மேற்கிந்திய, ஆசிய, ஆபிரிக்க மக்கள் முகங்கொடுத்து வந்துள்ள அவமானங்களைவிட அதிகமானவற்றைத் தாங்க நேர்ந்தது. வட அயர்லாந்தில் சர்வசன வாக்குரிமைக்குப் பதிலாக சொத்துடமைக்கு முதன்மை வழங்கும் முறையிலான வாக்குரிமை முறை இருந்தது. இதனால் இங்கு உள்ளூராட்சித் தேர்தல்களில் கத்தோலிக்க மக்களது குரல் மழுங்கடிக்கப்பட்டது. ஆர். யூ. ஸி. எனப்படும் வட அயர்லாந்து பொலிஸ் கத்தோலிக்க மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தது என்ற குற்றச் சாட்டு நீண்டகாலமாக தொடர்ந்து வந்தது. (அண்மையிற் கூட ஒரு அரசியற் கொலையில் ஆர்.யூ.ஸி. சம்பந்தப்பட்டதற்கான ஆதாரம் ஒரு அறிக்கையில் வெளியானது. இங்கு குறிப்பிடவேண்டியது)

பொறுத்தது போதுமென்று வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்கள் தமக்கும் சமத்துவம் கோரிச் சமாதானமான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இவை புரட்டஸ்தாந்து மதவாதக் குண்டர்களால் பொலிஸ் உதவியுடன் தாக்கி முறியடிக்கப்பட்டன. கத்தோலிக்க மக்களது குடிசன உரிமைகட்கான போராட்டம் 1960களின் பிற்பகுதியில் உச்ச நிலையை எட்டியதற்கும் உலகின் கவனத்தை கவர்ந்ததற்கும் அன்று அமெரிக்காவின் வியற்னாம் போருக்கு எதிராக உலகு தழுவிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட அலை போன்ற பலவற்றுக்கும் ஒரு தொடர்பு உண்டு.



**--தேசபக்தன்--**

பிரித்தானிய ஆட்சியாளரால் வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மத மேலாதிக்க வாதிகளது கொடுமைகளை மேலும் விட்டு வைக்க முடியாதவாறு பிரித்தானிய மக்கள் மத்தியிலும் கடுமையான கண்டனங்கள் எழுந்தன. இதன் விளைவாக பிரித்தானியப் படைகள் 1969ல் வட அயர்லாந்துக்கு அனுப்பப்பட்டன. கத்தோலிக்க மக்களுக்கு எதிரான வன்முறையை உடனடியாகவே கட்டுப்படுத்தினாலும் வெகு விரைவில் அவை கத்தோலிக்க மக்களுக்கு எதிராகத் திரும்பின. ஏனெனில் பிரித்தானிய ஆட்சி யாளர்களது வர்க்க நலன்கட்கும் புரட்டஸ்தாந்து மதவாதிகளது நலன்கட்கும் இருந்த நெருக்கம் கத்தோலிக்க மக்களது நலன்களைப் பாதுகாப்பதற்குத் தடையாக இருந்தது. இதன் விளைவாகப் படிப்படியாக ஐ.ஆர்.ஏ. யும் பிற கத்தோலிக்க போராளி இயக்கங்களும் வன்முறைப் போராட்டத்தில் இறங்கின.

ஐ.ஆர்.ஏ. வன்முறையைக் கண்டிக்கிறவர்கள் அதனையும் அதனையொத்த கத்தோலிக்க போராளிகளையும் பயங்கரவாதிகளாகக் காட்டி வந்துள்ளனர். வட அயர்லாந்து பொலிசாரின் அரச அதிகார உதவியுடனான பயங்கரவாதம் பற்றியோ பிரித்தானிய இராணுவத்தின் அட்டூழியங்கள் பற்றியோ எவரும் அதிகம் பேசுவதில்லை. அது போலவே பிரதானமான அரச விசுவாசிகள் (பிரித்தானியாவின் பகுதியாகவே வட அயர்லாந்து என்றும் வேண்டும் என்று கூறும் புரட்டஸ்தாந்து மதவாதிகள்) தமக்குப் பின்னால் வைத்துள்ள குண்டர் படைகள் பற்றியும் அண்மைவரை யாரும் அதிகம் பேசியதில்லை.

வட அயர்லாந்தின் வன்முறை நிகழ்வுகள் வெறுமனே அங்குள்ள கத்தோலிக்க-புரட்டஸ்தாந்து மதத்தவரிடையான ஒரு மோதலாக மட்டுமே காணப்பட்ட வரையிலும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அங்கு தமது படையினரை நிறுவுவதுடன் திருப்தி கண்டனர். கத்தோலிக்கர் கட்கெதிரான வன்முறையின் தோற்றுவாயான பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் சொந்த மண்ணாகிய இங்கிலாந்தில் ஐ.ஆர்.ஏ. செயற்படத் தொடங்கிய பின்னரே பிரச்சினையின் கனதி பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு உறைக்கத் தொடங்கியது. ஆயினும் பிரச்சினையை வட அயர்லாந்தின் கத்தோலிக்கர்களுக்கு இழைக்கப் பட்டுவந்த அநீதியின் விளைவு எனவோ தமது முன்னோர்கள் அயர்லாந்து பிரிவினை மூலம் உருவாக்கிய ஒரு சிக்கல் எனவோ காண மறுத்துப் பயங்கர வாதத்தையே பிரச்சினையின் மையமாகக் காட்டினர். இந்த அணுகுமுறை அடுக்கடுக்கான தோல்விகளைச் சந்தித்தது. எந்த விதமான பயங்கரவாத முத்திரை யாலும் ஷின்∴பெயினுக்கும் பயங்கரவாத இயக்கமாக அடையாளங்காணப்பட்ட ஐ.ஆர்.ஏ. க்கும் வட அயர்லாந்தின் கத்தோலிக்கர்களிடையிலிருந்த செல்வாக்கைக் குறைக்கவில்லை. 1997 தேர்தலில் ஷின்∴பெய்னின் வாக்கு விகிதம் கத்தோலிக்க மிதவாத (சோஷலிஸ) கட்சியான எஸ்.டி.எல்.பி. யினதை ஒத்ததாக இருந்தமை முக்கியமானது. எனவே பயங்கர வாதிகளுடன் அவர்கள் ஆயுதங்களைக் கீழே போடும்வரை பேசமாட்டோம் என்று திருமதி. தச்சர் மேடைதோறும் முழங்கினாலும் நடைமுறையில் ஐ.ஆர்.ஏ.யுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டது. அயர்லாந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்கள் மூலம் ஐ.ஆர்.ஏ. யுடன் இரகசியமான முறையில் சில தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் பிரித்தானிய வலதுசாரி அரசாங்கம் வட அயர்லாந்தில் அமைதியைப் பேணுவதற்காகத் தன்னுடைய கூட்டாளிகளான புரட்டஸ்தாந்து மதவாதிகளையும் (ஐக்கிய ராச்சிய) விசுவாசிகளையும் பகைத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை. எனவே போர் நிறுத்தத்திற்கான முயற்சிகள் தோல்விகண்டன. 1994ல் பிரித்தானிய அரசாங்கம் முதன் முறையாக ஷின்∴பெய்னின் உதவியுடன் ஐ.ஆர்.ஏ.யை ஒரு போர் நிறுத்தத்திற்கு உடன்படச்செய்தது. அதேவேளை புரட்டஸ்தாந்து மதவாதிகளையும் விசுவாசிகளையும் அவர்களது கட்சிகளையும் சார்ந்து நின்ற ஆயுதமேந்திய குழுக்களும் போர்நிறுத்தத்திற்கு உடன்பட்டன. போர்நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு அதிகமாகியும் ஷின்∴பெயினுடனான பேச்சுவார்த்தைகள் வெறுமனே காலம்கடத்தும் ஒரு உத்தியாக மட்டுமே தொடர்ந்தன. இதன் விளைவாக 1995ல் ஐ.ஆர்.ஏ. தனது போர்நிறுத்தத்தை முடித்துக் கொண்டு இங்கிலாந்து மண்ணில் தனது குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்தது. 1997ல் தேர்தல் நடக்கும் வரை மீண்டும் ஷின்∴பெயினுடனான பேச்சு வார்த்தைகள் பற்றிய பேச்சுக்கே இடம் இல்லாது போயிற்று.

1997ல் தொழிற்கட்சி ஏகப் பெரும்பான்மையுடன் அதிகாரத்திற்கு வந்து பின்பு பாராளுமன்றத்தில் தனது வலிமையினைப் பேண வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதவாதவிசுவாசிக் கட்சிகளைச் சார்ந்திருக்கும் தேவை அரசாங்கத்துக்கு இருக்கவில்லை. எனவே பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட்டு அண்மைய சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் முக்கியமான அம்சங்கள் மூன்று:-

1. வட அயர்லாந்து பிரித்தானியாவின் பிரிக்க முடியாத பகுதி அல்ல என்று பிரித்தானிய அரசாங்கமும் வட அயர்லாந்தின் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து சமூகமும் ஏற்கின்றன.

2. அயர்லாந்தின் சட்ட வரைவில் வட அயர்லாந்தை நாட்டின் ஒரு பகுதியாகக் கருதி எழுதப்பட்ட பகுதி (தென்) அயர்லாந்தின் சர்வசன வாக்கெடுப்பின் அங்கீகாரத்துடன் நீக்கித் திருத்தி எழுதப்படும்.

3. வட அயர்லாந்து தெற்குடன் இணைவது தொடர்பாக வடக்கில் உள்ள மக்கள் எதிர்காலத்தில் சர்வசன வாக்கெடுப்பின் அடிப்படையில் தீர்மானிக்க உரிமையுடையவர்களாகிறார்கள்.

இது அயர்லாந்தின் இரண்டு நூற்றாண்டுக்கால விடுதலை வேட்கைக்கு முற்றிலும் நியாயமான தீர்வல்ல. எனினும் வடக்கு-தெற்கு இணைப்பை எதிர்காலத்திலாவது சர்வசன வாக்கெடுப்பு மூலம் இயலுமாக்கியமை ஒரு முக்கியமான தார்மீக வெற்றியாகும்.

நிருவாக மட்டத்தில் வட அயர்லாந்தின் உள் நிர்வாகத்திற்கான ஒரு ஆட்சி மன்றம் அமைக்கப்படும். இதில் சிறுபான்மைக் கட்சிகளும் தேர்தலிற் தமது வாக்கு விகிதத்திற்கு ஏற்றவாறு முக்கியமான ஆட்சிப் பொறுப்புக்களில் அமரத் தகுதி யுடையோராவர். இதன் மூலம் கத்தோலிக்க மக்களுக்கு முதன் முறையாக வட அயர்லாந்தின் நிருவாகத்தில் ஒருபங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-தெற்கு அயர்லாந்து உறவுகள் தொடர்பான ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்படும். இது அயர்லாந்து மக்களின் ஒருமைப் பாட்டை அடையாளப்படுத்தும் ஒரு அமைப்பாகும். (இது சில புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளாலும் யூ.டி.பி. என்ற ஜனநாயக ஒன்றியக் கட்சியாலும் அதன் தீவிர கத்தோலிக்க விரோதத் தலைவரான இயன்பேஸ்லி பாதிரியாலும் ஒரு துரோகச் செயலாகவும் அயர்லாந்துக்குச் சரணாகதி எனவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.)

புரட்டஸ்தாந்து தலைமைகளது அச்சங்கட்கு ஈடுசெய்யுமாறு பிரித்தானிய பாராளுமன்றத்தினதும் வட அயர்லாந்து ஆட்சி மன்றத்தினரதும் பங்குபற்றுதலைக் கொண்ட ஒரு ஆலோசனைச் சபையும் நிறுவப்படும். மேற்கூறிய ஆலோசனைகளை நடைமுறைப் படுத்துவதிற் பல இன்னல்கள் உள்ளன. குறிப்பாக இன்று ஒரு சில தீவிர ஐரிஷ் குடியரசுவாதிகளும் அவர்களைவிட முக்கியமாக புரட்டஸ்தாந்து மதவாத சக்திகளும் இந்த உடன் படிக்கையைக் குலைப்பதற்கு விரும்பு கின்றனர். உடன்பாடு கைச் சாத்திடப்பட்ட பின்பு கத்தோலிக்கர்கட் கெதிரான சில பாரிய வன்செயல்கள் நிகழ்ந்துள்ளன. வடக்கின் மக்கள் பெரும்பாலும் அமைதியை விரும்பு வதால் இந்த உடன்படிக்கையை நடைமுறைப் படுத்த முக்கியமான சகல தரப்பினரும் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நீண்டகால அமைதியும் முன்னேற்றமும் இந்த உடன்பாட்டை ஆட்சியாளர்கள் எவ்வளவு அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றுகின்றனர் என்பதின் மீதே தங்கியுள்ளது.

--11ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# சிறியை எதிர்ப்போம் சிறையை நிறைப்போம்

## தமிழரசுக் கட்சியின் பயனற்ற முழக்கம்.

### தந்தையும் மைந்தரும் (6)

– இமயவரம்பன் –

*1957*ம் ஆண்டு தமிழரசுக்கட்சி மாநாட்டின் மூலம் வென்ற மக்கள் ஆதரவை ஒரு போராட்டச் சக்தியாக மாற்றும் ஆற்றல் தழிரசுக் கட்சிக்கு இருக்கவில்லை. அதற்கு முன்பிருந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகட்கும் அவ்வாறான ஆற்றல் இருந்ததில்லை. அறப்போர், சாத்வீகப் போராட்டம் என்றெல்லாம் பலதும் பேசப்பட்டாலும், ஒரு விதமான போராட்டத் திட்டமும் அவர்களிடம் இருக்கவில்லை. என்பதே உண்மை. நாட்டில் அவர்கள் அறிந்த இரண்டு அரசியல் வழிகளில் ஒன்று பாராளுமன்ற அரசியல் மற்றது தொழிற்சங்க நடவடிக்கை. முதலாவது அவர்கட்கு இயலுமானது. மற்றது பற்றி அதுவரை சிந்திக்கவும் இல்லை, அதற்கான வர்க்கத்தளமும் அவர்கட்கில்லை.

தமிழரசுக்கட்சி சில வகைகளில் தமிழ்க் காங்கிரஸை விட ஜனநாயகப் பண்புடையதாக காணப்பட்டது என்பது உண்மை. அது தமிழ் மக்களது உணர்வுகளைக் கூடுதலாகப் பிரதிபலித்தது என்பதும் உண்மை. ஆயினும் வெகுஜனப் போராட்டம் என்பது வெற்றி பெற ஜனநாயக அரசியலும் மக்களின் உணர்வைச் சரியாக மதிப்பிட்டு வழிநடத்தும் தலைமைத்துவ ஆற்றலும் தேவை. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் பாராளுமன்றத் தலைமையால் பொதுத் தேர்தல் பிரசார அரசியல், அரசியல் பேரங்கள் என்ற வரையறைகட்கு அப்பாற்செயற்பட முடியவில்லை. இந்த விடயத்தில் தமிழ்க் காங்கிரசின் செயற்பாட்டை விட அதிகமாகத் தமிழரசுக் கட்சி எதையுமே கொண்டிருந்திருக்க முடியாது. ஒரு போராட்ட அரசியலுக்கான தேவை அக்கட்சியால் உணரப்பட்டது. ஆயினும் அதை நடைமுறைப் படுத்த அவசியமான வெகுஜன அரசியல் நடைமுறை அன்று அக்கட்சித் தலைமையிடம் இல்லை என்றே கூற வேண்டும். இதன் விளைவாகவே அக்கட்சி எதற்காகப் போராடுவது எதற்குப் பொறுமை பேணுவது என்ற விடயத்தில் பல தவறுகளை இழைத்தது.

CEYLON என்ற பெயரில் இருந்த O தவிர்ந்த ஐந்து எழுத்துக்களில் இரண்டை எடுத்து மோட்டார் வாகன இலக்கத் தகடுகளை அமைக்கும் முறையில் C, E தொடர்கள் 1957ல் முடிவுக்கு வந்தன. இந்தமுறை எவ்வாறாயினும் மேலும் சில ஆண்டுகளில் முடிவுக்கு வருமாதலால், தொடர்ந்து என்ன இலக்க முறையைக் கையாள்வது என்ற பிரச்சினை உடனடியாக எழாவிட்டாலும், ஆங்கில எழுத்துக்களின் இடத்தில் இடத்தில் ஸ்ரீ லங்கா என்பதன் முதல் எழுத்தை வைத்து இலக்கத் தகடுகளை அமைக்கும் முடிவைப் போக்குவரத்து அமைச்சு எடுத்தது.

இந்த எழுத்துக்கு கூட ஒரு நிஜமான தேவை இருக்கவில்லை. இதில் ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களம் என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கம் புலனான போதும் இது ஒரு பெரிய தமிழர் விரோத நடவடிக்கை என்று யாரும் வாதிக்க இடமில்லை. ஆயினும் சிங்களமே அரசகரும மொழியாக்கப்பட்டுச் சில மாதங்களின் பின்பு வந்த இந்த நிகழ்வு தமிழ்த் தேசியவாதிகள் சிலரது ஆத்திரத்தைக் கிளறியது. நியாயமான ஆத்திரம் தவறான உணர்வல்ல. ஆயினும் வெறும் ஆத்திரத்தின் பேரில் எடுக்கப்படும் முடிவுகள் சரியாக அமைவது அருமை. மிகவும் நிதானமாக எதிர்ப்பைத் தெரிவிக்கவோ மாற்று ஆலோசனையாக எதையாவது முன்வைத்துச்



சிங்கள முற்போக்கு வாதிகளது ஒத்துழைப்பைப் பெறவோ தமிழரசுத் தலைமைக்கு அக்கறை இருக்கவில்லை. சிங்கள ஸ்ரீ பொறித்த இலக்கத் தகடுகளும் 'தமிழ் ஒழிப்பில்' ஒரு முக்கியமான பகுதி என்ற விதமாகக் அதை விளக்கியதோடு நில்லாமல் ஒரு போராட்டத்தையும் தொடங்கினார்கள்.

இந்தச் (சிங்கள) ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தில் தமிழரசுக் கட்சி நான்கு ஆண்டுகள் பின்பு நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தில் நேரவிருந்த தவறுகட்கான பல அறிகுறிகளும் இருந்தன. இந்தப் போராட்டம் தமிழரசுக் கட்சி பற்றித் தெற்கில் இருந்த மதிப்பீட்டைப் பாதகமாகப் பாதித்தது. ஆனால் அது பற்றித் தமிழரசுக்கட்சித் தலைமை அதிகம் சிந்தித்ததற்குச் சாத்தியமில்லை.

இந்தப் போராட்டம் தமிழரசுக் கட்சியின் செயற்குழுவோ பாராளுமன்றக் குழுவோ தீர ஆலோசித்துத் தொடங்கிய ஒன்றல்ல. இது எப்படி மேற்கொள்ளப் பட வேண்டும் என்ற ஆலோசனை எல்லா மாவட்டங்கட்கும் வழங்கப் படவுமில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு சில தமிழரசுப் பிரமுகர்கள் எடுத்த முடிவை யொட்டிப் புது வாகன இலக்கத் தகடுகளில் இருந்த 'சிங்கள ஸ்ரீ' எழுத்தின் இடத்தில் தமிழ்(?) ஸ்ரீ எழுத்தைப் பொறிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்திற்கு வட்டுக்கோட்டை பா. உ. அமிர்தலிங்கம் ஒரு முக்கிய தூண்டு கோலாக இருந்தார். இது பற்றிக் கிழக்கிலங்கையில் அதிக உற்சாகம் இருக்கவில்லை. இதற்குக் காரணங்கள் பல. மன்னாரிற் கூட சிங்கள எழுத்தை நீக்குவது விரும்பப்படவில்லை. இந்தப் போராட்டம் போதியளவு முன்யோசனையோ கலந்தாலோசனையோ இல்லாமல் நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் போராட்டத்தின் போதும் பின்னரும் புலனாயின.

யாழ்ப்பாணத்தில் சிங்கள ஸ்ரீ எழுத்துக்கு மேலாக தமிழ் ஸ்ரீ எழுத்து ஒட்டப்பட்டது. மன்னார் பா.உ. வீ. ஏ. அளகக்கோன் தலைமையில் நடந்த போராட்டத்தில் சிங்கள எழுத்துக்கு அருகாகத் தமிழ் எழுத்து ஒட்டப்பட்டது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஸ்ரீ என்று பொறித்த சம்பவமும் நடந்ததாகக் கூறப் பட்டது. இரண்டு மூன்று நாட்களாக தெருத்தெருவாக லொறிகளில் ஏறிச் சென்ற தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் 'சிறியை எதிர்ப்போம், சிறையை நிறைப்போம்' என்றும் இன்னும் பல வீர வசனங்களுடனும் முழங்கினார்கள். சாதாரண மக்களிடம் இருந்தவை அதிக பட்சம் சைக்கிள்களே. றிக்சோக்களும், மாட்டுவண்டிகளும் இலக்கத் தகடுகள் இல்லாமலே ஓடியதால் அவையும் போராட்ட இயக்கத்தில் இறங்க முடியவில்லை. எனவே போராட்டம் தொடங்கியதிலும் வேகமாகவே முடிவுக்கு வந்தது. அரசாங்கத்தின் சட்ட ரீதியான பொறுப்பை நிறைவேற்றும் தேவை கருதிப் பொலீசார் வாகன இலக்கத் தகடுகளைப் பங்கப் படுத்திய குற்றத்திற்காகப் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் சிலரை அழைத்து வாக்கு மூலம் பெற்றார்கள். பின்பு வழக்குத் தொடரப் பட்டுத் தள்ளுப்பட்டதோடு ஸ்ரீயை எதிர்த்தவர்கள் சிறையைப் பார்க்காமலேயே போக நேர்ந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக நடந்த இரு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கன. 'ஸ்ரீ' 1 என்ற இலக்கம் பொறித்த முதலாவது சிங்கள ஸ்ரீ வாகனம் முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவவுக் குரியது. அவர் மிகவும் கவனமாகத் தனது புதிய வண்டிக்கு இந்த இலக்கத் தகட்டைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருந்தார். இந்தக் கொத்தலாவலவை தமிழுக்கும் சம அந்தஸ்து என்று 1955ல் வடக்கில் வாக்குறுதி தரச் செய்து ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1956ல் ஏமாந்த கதையை முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

மற்றது, தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கு. வன்னியசிங்கம் தொடர்பானது. சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடுகள் வந்த பின்பு அவருடைய மோட்டார் கார் விபத்தில் சிக்கி நாசமாகிவிட்டது. காப்புறுதி நிறுவனம் அவருக்கு ஒரு புதிய வாகனத்தை வழங்க முன்வந்தது. அவரோ பிடிவாதமாக ஆங்கில (EN) எழுத்துக்கள் பொறித்த ஒரு வாகனமே வேண்டும் என்று கூறி ஒரு பாவித்த வாகனத்தைப் பெற்றுக்கொண்டார். இது சிங்கள ஸ்ரீ பதித்த வாகனத்தில் பயணம் செய்ய மாட்டேன் என்ற அவரது நிலைப்பாட்டின் ஒரு கூற்று என்று கொள்வதில் நியாயம் உண்டு. எனினும் ஒரு வகையில் தமிழரசுக் கட்சி தொடர்ந்து வந்த போராட்டக் காலங்களில் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்துக் கைகழுவப் பாவித்த உத்திகளுக்கு இது ஒரு முன்னுதாரணமும் ஆகிற்று.

இந்த ஸ்ரீ எதிர்ப்பு மூர்க்கத் தனத்தின் விளைவாக, வட பிரேதேச மக்கள் பழைய பஸ் வண்டிகளில் பதினைந்து வருட காலமாகவேனும் அல்லற்பட வேண்டி நேரிட்டதைத் தமிழரசுத் தலைவர்கள் மெல்ல மறந்து விட்டனர். புதிய வாகனங்கள் வேண்டாம் என்ற தமிழரசுக் கோரிக்கையால் நட்டப்பட்டவர்கள் பாராளுமன்ற உறுப்பி னர்களல்ல சாதாரண மக்களே. ஏனெனில், தியாகங்கள் தலைவர்கட்கானவையல்லவே.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஒரு பயனற்ற அல்லது தவறான போராட்டம் என்பதை இன்றுவரை தமிழரசுக் கட்சி, த.வி.கூ. ஏற்கவில்லை. அது போக, அது தோல்வியடைந்து விட்டது என்ற உண்மையை ஏற்கவும் அவர்கட்கு நீண்ட காலம் எடுத்தது. இந்த விதமான வீம்பு இன்னும் பல சந்தர்ப்பங்களிலும் பின்னர் காணப்பட்டதை நாம் கவனிக்கலாம். எவ்வாறாயினும் செல்வநாயகத்துக்குத் தம்மை நெருக்கமாக்கிக் கொண்ட சிலரது எதேச்சதிகாரதனமான செயல்களால் கட்சியின் சில முக்கிய தலைவர்கள் அதிருப்தி அடைந்திருந்தாலும், செல்வநாயகத்தை மீறிச் செயற்படும் மனநிலையில் அவர்கள் எவருமே இருக்கவில்லை. அதிகம் பேசாதவரான செல்வநாயகம் என்ன நினைக்கிறார் என்பதும் பலர் அறியாதது. அவர் சார்பில் பேசிய சிலரது சொற்களில் அவரது அங்கீகாரம் பெற்றவை எவை என்பதும் தெளிவாக இராததால், கட்சிக்குள் ஒரு சிறு கும்பல் இரகசியமாகத் தனது அதிகாரத்தை வளர்ப்பதும் இயலுமாயிற்று.

தமிழரசுக் கட்சியின் போராட்ட வலிமை எப்படியாயிருந்தாலும் பரவாயில்லை. நாட்டில் திட்டமிட்டே சிங்கள இனவாதம் வளர்க்கப்பட்டு வந்த ஒரு நிலைமையில் இந்த ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் தென்னிலங்கையில் எந்த விதமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை வடக்கில் இருந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிப் பிரமுகர்களும் உணராமல் இருந்திருப்பதற்கும் நியாயம் உண்டு. ஆனால் கொழும்பிலேயே நிரந்தர வாசம் செய்து வந்த தமிழரசுத் தந்தைக்கு அது விளங்காமல் இருந்தது. அவரது 'தீர்க்க தரிசன' ஆற்றலுக்கு ஒரு மாசு என்றுதான் கூறவேண்டும்.

பண்டாரநாயக–செல்வநாயகம் பேச்சு வார்த்தையின் விளைவாக ஒரு உடன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பை முறியடிக்கக் காத்திருந்த சக்திகட்கு ஸ்ரீ எதிர்ப்புப் போன்ற செயல்கள் வசதியான ஆயுதங்களாகின. அதைவிட முக்கியமாக மொழிப்பிரச்சினையைக் காரணங் காட்டித் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களது தொழிலையும், சொத்துக்களையும் சிதைக்கவும், பறிக்கவும் காத்திருந்த ஒரு சிங்கள இனவாத முதலாளித்துவக் கும்பலுக்கும் இது போன்ற மூர்க்கச் செயல்கள் வசதி செய்தன. தென்னிலங்கையில் 1958ல் நடந்த இனவாத வன்முறைக்குத் தமிழரசுக் கட்சியே காரணம் என்று கூறுவதில் நியாயம் இல்லாவிடினும் அந்தக் கொடுமையின் பின்னணியில் இருந்த சக்திகளது கையைப் பலப்படுத்திய காரணிகளில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமும் ஒன்று என்பதை மறுக்க அவர்களால் முடியாது.

தென்னிலங்கையிற் பேர்ப்பலகையின் தமிழைத் தார்பூசி அழிக்கும் இயக்கத்தின் தொடர்ச்சியாகவே தமிழர் மீதான வன்முறை தொடங்கியது என்பது இங்கு நினைவு கூர உகந்தது. இவ்வன்முறை பற்றிப் பின்னர் கவனிப்போம். அதற்கும் முன்னர் நடந்த சில விடயங்களைப் பற்றி அடுத்து வரும் பகுதிகளில் கூறுவது '58 வன்முறையின் பின்னணியை விளங்கிக் கொள்ள உதவும்.

---

### போக்கும் வரத்தும்....

(4ம் பக்க தொடர்ச்சி)

கசிந்துள்ளன. யுத்தம் எப்படி யார் யாரை எல்லாம் வாழ வைத்து வருகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

ஒருவரது பிரயாணத்திற்கான பாதுகாப்பு அனுமதி பெறுவதில் நடைபெறும் ஊழல் மிக மோசமானதாகும். ஒருவர் அவசரமாகப் பிரயாணம் செய்ய நேர்ந்தால் பயணச் சீட்டுடன் சேர்த்து எண்ணாயிரம் ஒன்பதாயிரம் கொடுத்து இடைத்தரகர்கள் மூலம் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு பயண விடயம் போன்று ஒவ்வொரு துறையிலும் அப்பட்டமான லஞ்சமும் ஊழலும் தாராளமாக நடைபெறுகிறது. இவற்றுக்கான அடிப்படையாக இருப்பது தொடரப்படும் யுத்தமேயாகும். யுத்தம் ஏற்படுத்தி நிற்கும் பன்முக நெருக்கடிகளுக்கும் பின்னால் பணம் கறத்தல் இடம் பெற்று வருகிறது. தமிழர்கள் என்றால் அவர்களிடம் தாராளமாக வெளிநாட்டுப் பணம் கட்டுக் கட்டாக இருக்கிறது. எனவே எத்தகைய லஞ்சத்திற்கும் கட்டணங்களுக்கும் எவ்வளவு உயர்த்தி வாங்க முடியுமோ அந்தளவிற்கு உயர்த்தி வாங்கிக் கொள்கிறார்கள். இதுவே போக்குவரவுப் பயணத்தில் ஆட்களுக்கு மட்டுமன்றி பொருட்களுக்கும் அதிகவிலை பெறப்படுகிறது. யுத்தம் நிறுத்தப் பட்டால் யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்?

நன்றி - நூலகத்திட்டம்



## அக்கம் பக்கம்

# குறளி வித்தையைக் கருவியாக்கி...

ஏப்ரில் இருபத்தொன்பதோ, முப்பதோ சரியாக நினைவில்லை. மழலை மாறாத இரண்டு குரல்கள் பேசிக் கொள்கின்றன.

'அதென்ன சொல்லுமப்பா–மேதினம் என்றால் என்ன?' உமக்குத் தெரியாதா? வெசாக்கைத்தான் மேதினம் என்று சொல்லுறது. சிங்கள நாட்டிலே தான் அது அதிகம் கொண்டாடிறது. இந்த முறை நாங்களும் பங்கு பற்ற வேணுமாம்.

'பல வேறு வட்டாரங்களும்' பல வேறு தரப்புகளும் பல வேறு கட்சிகளும் குழுக்களும் கூட்டுகளும் அணிகளும் இப்பொழுது மேதினத்தை கொண்டாடத் தொடங்கியுள்ளன. இந்த திருநாளைச் 'சிறப்பிப்பதற்கு' குழந்தைப் பிள்ளைகள் உட்பட அனைத்து மக்களும் பயன்படுத்தப் பெறுவது மிக அண்மைக்கால வழக்கமாகி விட்டது. முன்னொரு காலத்திலே வர்க்க உணர்ச்சியும், உரிமை எழுச்சியும் தரும் நாளாக இது அனுசரிக்கப்பட்டு வந்ததுண்டு. உழைக்கும் வகுப்பினர் தமது வலிமையையும் உறுதிப் பாட்டையும் உயிர்ப்பித்துப் புத்தூக்கம் பெறும் நன்னாளாய் இது அமையலாயிற்று.

பின்னர் இது இலங்கையிலே பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. பொது வாழ்விலே இடதுசாரிக் கருத்தோட்டங்கள் மேலோங்கி முனைப்புப் பெற்ற காலத்தில் மக்கள் மனங்களைக் கவர்ந்து இழுத்துக் கொள்ளும் ஒரு உபாயமாக இதைக் கருதினர் போலும்! அதனாலே தானோ என்னவோ போட்டி போட்டு ஊர்வலங்களும் முழக்கங்களும் கூட்டங்களும் நடத்தப்படுவது வழக்கமாயிற்று. இப்படிச் சில காலம் கழிந்தது.

பிறகு யாரோ பெரியவரின் மூளை மிகவும் கெட்டித்தனமாக யோசித்திருக்க வேண்டும். இந்த உரிமைத் திருநாளின் தன்மையையே மாற்றக் கூடிய விதத்தில் இதன் வடிவத்திலே 'புது வரவுகள்' புகுத்தப்பட்டன. இதன் காத்திரத்தையும் கண்ணியத்தையும் கொச்சைப் படுத்தும் போக்கிலே துள்ளிசைக் கூத்துகளும், கும்மாளங்களும் நடன நாட்டியங்களும் கோலாலங்களும் சேர்ந்து கொண்டன. மேநாளின் ஆதி நோக்கங்களுக்கும், இந்தக் கூத்தடிப்புகளுக்கும் இடையேயான தூரம் மெல்ல மெல்ல விலகி அகலமாகிக் கொண்டே போயிற்று. இந்த விலகல்கள் மக்களின் கவனங்களைத் திசை திருப்பும் உத்தியாகவும் இப்பொழுது மாறிக் கொண்டிருக்கின்றன.

உணர்வு விழிப்புகளை மழுக்கி மங்கவைக்கும் நோக்கமும் இந்த விதமான களியாட்ட மனப்பான்மையை ஊக்குவித்து அதற்கு இரைபோடும் முயற்சிகளின் பின்னால் உள்ளது. சிறு பிள்ளைகளுக்குப் பொம்மைகளைக் கொடுத்தும், கிலுகிலுப்பைகளை குலுக்கிக் காட்டியும், 'குழலூதியும், குந்தி நெளித்தும், கோணங்கி ஆடியும் 'எத்தி அணாப்பி' பராக்குக் காட்டுவதில்லையா? வேடிக்கை காட்டுவதில்லையா? கிட்டத்தட்ட இதே போன்ற வித்தைகளைக் திட்டமிட்டு ஊக்குவிப்பதிலே புதியதானதோர் உற்சாகம் இப்பொழுது குடாநாட்டிலும் உதயமாகிறது என்று சொன்னால் அதிலே அதிகம் பிழை இருக்க முடியாது.

அண்மையிலே புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு யாழ்ப்பாண முற்ற வெளியில் இடம் பெற்ற இசை நடன நிகழ்ச்சிகள் இரவிரவாக மிகுந்த ஆரவாரத்துடன் நடந்தேறின. இதற்குத் திரள் திரளாக மக்கள் விழுந்தடித்துச் சென்று ஆடிப்பாடி மகிழ்ந்து திளைத்தார்கள். மகிழ்ச்சியிலே திளைப்பதும், ஆனந்தங்களை நாடி அடைவதும் அவற்றை நுகர்வதும் மனித இயல்புகள். உயிரின் இயற்கை. அதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், மேலோட்டமான சில கிளு கிளுப்புகளுக்கு அப்பால் ஆழ்ந்தூன்றிய மனித விழுமியங்கள், கலைப் பெறுமானங்கள், பண்பாட்டுக் குறிக்கோள்கள் இல்லை என்று நம்ப வைப்பது நாகரிகத்தையும் முன்னேற்றத்தையும் படைப்புத் திறைமைகளையும் ஆற்றல் மேம்பாட்டின் மலர்ச்சிகளையும் வேண்டுமென்றே மறுப்பதாகும். இவ்விதமான எதிர்மறை முயற்சிகள் கலாசார வரட்சிக்கும் பண்பாட்டு வறுமைக்குமே நம்மை இட்டுச் செல்லும். இந்த எதிர்மறை முயற்சிகள் திரைமறைவிலே திட்டமிட்டு முடுக்கி விடப்படுமாயின் அவற்றின் விளைவுகள் இதுவரை நாம் சந்திக்க நேர்ந்துள்ள பயங்கரங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் கொடியனதாகவே இருக்கும்.

இப்பொழுது நம்மைச் சுற்றி சூழ்ந்துள்ள வசதிக் குறைவுகளும், தொடர்ச்சியான இன்னல்களும் இடைஞ்சல்களும் இந்த விதமானதொரு 'சீர்குலைவுக்கு' உகப்பானவை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால் ஏழெட்டு ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் எங்கள் இரவுகள் முழு இருட்டிலோ அரைகுறை இருட்டிலோதான் கழிந்து வந்துள்ளன. கள்ளமாக ஒளித்து மறைந்தும் கூனியும் குறுகியும் மட்டுப்பட்ட அளவிலே தான் நம் இசைவுகள் இருந்து வந்துள்ளன. இதனால் எங்கள் நாடகசாலைகள் மூடிக்கிடந்தன. நாவலர் வாய்களும் சோர்வால் தளர்ந்தன. பாடிடும் தேன் வண்டு பண்ணை மறந்தது. பாங்கான சூழ்நிலை தூங்கி வழிந்தது. ஓடிடும் சீவன் ஒழிந்துத் திரிந்தது. ஊக்கம் குறைந்தது. தேக்கம் நிறைந்தது. ஊர்களிலெல்லாம் பூடு வளர்ந்து காடு பற்றி இடிந்து கிடக்கின்றன. குறிப்பாக சென்ற மூன்று நான்கு ஆண்டுகளாக இதுதான் நிலைமை.

இடிந்துடைந்த சூழ்நிலையிலே முடங்கிக் கிடக்கின்ற நம்மிற் சிலருக்கு சிறு சிறு வெளிச்சத் துளிகள் கூடப் பெரிய வரப்பிரசாதமாக விசுவரூபங் கொண்டு காட்சி அளிக்கின்றன. ஒன்று விட்டொரு நாளுக்கு நெருப்புக் கொள்ளிகள் போல மினுங்கித் தூங்கி வழியும் மூன்றோ மூன்று பல்புகளின் 'சிணுங்கல்' கூட பல்லாயிர கோடி சூரிய பிரகாசமாகத் தோற்றம் தருகின்றது. கொஞ்சம் செழிப்பான வருமானம் உள்ளவர் களென்று தம்மைக் கணித்துக் கற்பனை பண்ணும் பெருமைக் குரியோர் ஒரே இரவிலே ஐந்தாறு திரைப்படங்களை இடைவேளை இன்றி ஜெனரேற்றரை இயக்கிப் போட்டுப் பார்த்துப் பரவசப் படுகிறார்கள். வீட்டுக்கு வீடு சின்னத் திரைகளில் பார்த்துப் பரவசப் படுகிறார்கள். வீட்டுக்கு வீடு சின்னத் திரைகளில் இவை நடந்து கொண்டிருப்பதைக் கண்ட வேறு சிலர், சற்றுப் பெரிய திரைகளிலே இந்தப் படங்களை 'வீசி' சிறிதே அகலங்கூடிய சனத்திரளைக் கவர்ந்து ஈர்த்துப் பயன் கொள்ளுகிறார்கள். இன்னும் சிற்சில மையங்களிலே இரகசிமாகப் பார்த்துக் களிக்க வேண்டிய கலைத் திரவியங்கள் திறந்து காட்டப்படுகின்றன என்றும் கதை உலாவுகிறது.

மூடிக்கிடந்த குகைக் கதவுகளைத் திறந்துவிடும் போது நிகழும் உடனடித் திடீர் விளைவுகளே இவை என்று உளவியல் 'விற்பன்னர்கள்' சொல்லக் கூடும். அதிலும் ஓரளவு உண்மை இருக்கலாம் ஆனால் முடங்கிக் கிடப்பவர்களின் சின்னச் சின்ன ஆசைகளுக்கு இரை போட்டு இவர்களைத் 'தாக்காட்டிக்' கொண்டே காலத்தைக் கழித்து விடலாம் என்று சிலர் மனப்பால் குடிக்கலாம் அல்லவா?

அண்மையில் நிகழ்ந்தேறிய கலைக் கும்மாளத்தின் பின்னர் பெருந் தொகையான கூட்டம் 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' வீதி நெடுகிலும் அலைமோதிக் கலாட்டா செய்ததாம். சயிக்கிள் திருட்டுகள், உதிரிப்பாக நீக்கம் உட்பட முறைகேடுகள் சில நடந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்தத் தருணத்தில் 'ஓ யாழ்ப் பாணத்திலே இத்தனை இளைஞர்கள் இருக்கிறார்களா? என்று பெரியவர் ஒருவர் வியந்து கூவினாராம். இந்த நிலைமையில், இந்த இளைஞர்களின் வருங்காலம் பற்றிச் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடப்பாடு நம் சமூகத்துக்கு உண்டு. 'என்ன செய்கிறோம்? ஏன் செய்கிறோம்? என்று தெரியாத நிலையிலே லேசாக எடுபட்டுப் போகத்தக்க பிஞ்சு மனங்களை, மறைமுகமான சக்திகள் ஆட்டிப் படைத்து இயக்குவதற்கு இடங்கொடுக்காமல் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

போதைப் பொருள்கள் மருந்து வடிவத்திலுள்ள இரசாயனத் தயாரிப்புகள் மாத்திரமல்ல. விளம்பர உத்தி நுணுக்கங்களைத் துறைபோகக் கற்று, கற்றாங்கு ஒழுகும், அவற்றைக் கடைப்பிடித்து நடைமுறைப் படுத்தும் சூராதி சூரர்கள் பல்கிப் பெருகிவிட்ட நுகர்வுக் கலாசார யுகம் இது. இந்த யுகத்திலே 'பொழுது போக்கு' என்ற மறைமுகமான இரகசிய வடிவத்திலும் போதைப் பொருள்களைத் தயாரித்து எடுக்கலாம்.

குளிசை வடிவத்தில் இருந்தாலென்ன, ஊசி வடிவத்தில் இருந்தாலென்ன, ஆவிவடிவத்தில் இருந்தால் என்ன, ஒடியோ–வீடியோ கசெற் வடிவத்தில் இருந்தாலென்ன, இனிமேற் கண்டு பிடிக்கப்படவுள்ள எந்த அதி நவீன மின்னணுக் கலைச்சாதன வடிவத்தி லிருந்தாலென்ன போதைப் பொருள்கள் ஆபத்தானவையே.

--ஐ.ஐ.ஓ.

## ஆன்மிக அணுகுண்டு

புனித பாரத பூமியின் இந்துத்துவ அரசு பரிசோதித்த அணு குண்டுகள் புனிதமானவை. அவற்றால் மனிதருக்கோ விலங்கினங்கட்கோ தீங்கு ஏதும் ஏற்படாது. அப்படி ஏற்படுமானால் காஞ்சி காமகோடிபீட ஜகத்குரு சங்கராச்சாரியப் பெரியவாள் அதை அங்கீகரித்திருப்பாரா? இல்லை உலகப் புகழ்பெற்ற சமாதான விரும்பியும் அவதார புருஷரும் மஹாநுபாவருமான தலாய்லாமா தான் அதை வாழ்த்தியிருப்பாரா?

பசுபிக் சமுத்திரத்தில் பிரெஞ்சு ஆட்சியாளர் அணுகுண்டு வெடிப்பை மேற்கொண்டதையடுத்து நியூசிலாந்தின் பால்மாவை வாங்க வேண்டாம் என்று ஸ்ரீ சத்யசாயி பாபா அன்பர்களைப் பணித்ததற்கு வியாபார நோக்கம் இல்லை என்று நாம் நம்பலாம். அவர் இந்திய அணுகுண்டு வெடிப்பின் பின்பு இந்திய உற்பத்திகளை வாங்க வேண்டாம் என்று பணிப்பாரா? பணிப்பாராயின் அந்நியக் கம்பெனியார் அகமகிழ்வர்.

## ஒரு இலக்கிய சர்ச்சை

'இலங்கையில் இன்று வாழும் மூத்த தமிழ்ப் படைப்பிலக்கிய வாதிகளிற் தலை சிறந்தவர் யார்?'

'வ. அ. இராசரத்தினம்?'

'இல்லை.'

'அ. செ. முருகானந்தன்?'

'இல்லை.'

'குழந்தை சண்முகலிங்கம்?'

'இல்லை.'

'சரி அப்படியானால் யார்?'

'பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பிதான்.'

'அவர் அப்படி என்ன எழுதியிருக்கிறார்?'

'அங்கேதான் உள்ளது விஷயம். ஒரு ஆக்கஇலக்கியப் படைப்பையாவது வழங்காமல் ஜப்பானியக் கம்பெனியாரின் தமிழ் இலக்கியப் பணிக்கான விருதைத் தட்டிக்கொண்டு போய் விட்டாரே.'

'விருது பெற்ற மற்றவர்கள்?'

'எல்லாரும் சிங்களவர். எல்லாரும் அங்கே பெரிய படைப்பாளிகள்.'

'அதுதானே சொல்கிறார்கள், சிங்களயா மோடயா என்று!'

## பழைய கொடியின் புதிய சிந்தனை?

மலையக மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க புதிய சிந்தனை புதிய பாதை புதிய இயக்கம் தேவை என்று கூறியவர் மாகாணசபை தேர்தலில் இ.தொ.கா. வின் பட்டியலில் போட்டியிட இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது.

செக்கிங் என்ற பெயரில் மலையக இளைஞர்களும் வகை தொகையின்றி கைது செய்யப்படுகின்றனர். பயங்கரவாத சந்தேக நபர்கள் என்று பல மலையக இளைஞர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். தனியார்மயம் என்ற பேரில் இந்நாட்டுத் தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு அடக்கப்பட்டு வருகின்றனர். யுத்தம் மிகவும் மும்முரமாக நடத்தப்படுகிறது.

இந்நிலையில் அவரது பழைய செங்கொடிச் சங்கம் மேதினக் கூட்டத்தை நடத்தியிருக்கலாம். மாறாக பாராளுமன்றத்துக்குள் இருக்கும் இடதுசாரி கட்சிகள் நடத்திய 'வித்தியாசமான' மேதின ஊர்வலத்திலும், பின்னர் நடைபெற்ற அரசாங்கத்தின் மேதினகூட்டத்திலும் கலந்து கொள்ளும்படி தொண்டர் களை கேட்டுக் கொண்டார்.

மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கை களை எடுக்கின்ற அரசாங்கத்துடன் அரசாங்கத்தில் இருக்கும் அவரது கம்யூனிஸ்ட் கட்சியினூடாக ஒட்டிக் கொள்வதும், பிற்போக்குவாத அமைப்பான இ.தொ.கா பட்டியலில் போட்டியிடுவதும் தான் பழைய செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளரின் புதிய சிந்தனையும், புதிய பாதையும், புதிய இயக்கமுமா?

நன்றி - நூலகத்திட்டம்



# போரும் பொருளாதாரக் கொள்கையும் கல்வியைப் பாழடித்து வருகிறது

அண்மைக் காலத்தில் வீழ்ச்சியடைந்து வரும் நாட்டின் கல்வித்துறை பற்றி பல்வேறு விதமான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் முன்வைக்கப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு அரசாங்கமும் பதவிக்கு வந்ததும் கல்வித் திட்டத்தில் மாற்றம், புதிய பாடத்திட்டங்கள், நாட்டிற்கான நவீன கல்வி என்றெல்லாம் முழங்கிக் கொள்வார்கள். மேலும் நவீன தொழில் நுட்பத்தின் தேவை பற்றியும் கணனி யுகத்திற்குள் நுளைவது பற்றியும் எடுத்துக் கூறி வருகிறார்கள். உயர் கல்வித் துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி வெள்ளை அறிக்கை முதல் பாடத்திட்ட மாற்றம் வரை கடந்த இரண்டு தசாப்த காலத்தில் நிறையப் பேசிவந்துள்ளார்கள். ஆனால் கல்வித் துறையின் வீழ்ச்சி வருடாவருடம் கீழ் நோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

இடைநிலைக் கல்வியின் இறுதிநிலை க.பொ.த. (சா/த) க.பொ.த. (உ/த) பரீட்சைகளாகும். இங்கிருந்துதான் நாட்டின் உயர்கல்விக்கு மாணவர்கள் பயணத்தை ஆரம்பிப்பர். ஆனால் அத்தகைய ஒரு நிலையை நோக்கி மாணவர்கள் எவ்வாறு கல்வித் திட்டத்தின் மூலம் வழி நடத்தப்படுகின்றனர் என்பது முக்கியமானதாகும். ஒரு க.பொ.த. (சா/த) படிக்கும் மாணவருக்கு ஒழுங்காக ஒரு கடிதம் எழுதவோ அல்லது ஒரு நூலினை வாசிக்கவோ முடியவில்லை என அண்மையில் கவலை தெரிவிக்கப்பட்டது.அதில் உண்மை நிறைய உண்டு. ஆனால் இந்த நிலைக்கு மாணவர்கள் மட்டும் அல்லது ஆசிரியர்கள் மட்டும் பொறுப்பல்ல என்பதே கவனிக்க வேண்டியதாகும். இவ்விரு பகுதியினரும் தமக்குரிய பொறுப்பினை முற்றாகத் தட்டிக் கழித்துவிட முடியாத ஒன்றாக உள்ள அதே நேரம் கல்வித்திட்டமானது குறிக்கோள்கள் எதுவுமின்றி முன்னெடுக்கப்படும் சமூகச் சூழலும் மிக முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.

அண்மையில் வெளிவந்த க.பொ.த. (சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் கல்வித்தர வீழ்ச்சியைப் பிரதிபலித்ததை அவதானிக்க முடிந்தது. ஐந்தே முக்கால் லட்சத்து சொச்ச மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள். இந்த மொத்த எண்ணிக்கையில் 27.5 சதவீத மாணவர்கள் மட்டுமே க.பொ.த. (உ/த) படிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். 22,282 பேர் அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெறவில்லை. அதேவேளை 1255 மாணவர்கள் மட்டுமே எட்டுப் பாடங்களில் அதிவிஷேட சித்தியடைந்துள்ளனர். இது கடந்த வருடத்தை விடக் குறைவானதாகும். இப்பரீட்சை முடிவானது வீழ்ச்சியடைந்து செல்லும் நம் நாட்டுக் கல்வித் துறையில் ஒரு பதச்சோறு என்று கூறலாம்.

கல்வி என்பது சில அறிவு ஜீவிகள், பேராசிரியர்கள், அறிவியலாளர்கள், அறிஞர் பெருமக்கள் என்போரால் மட்டும் ஆக்கப்பட்டு வழி நடாத்தப்படும் ஒன்று என்ற விதமான ஒரு மயக்க நிலை தொடர்ந்து இருந்து வருகின்றது. கல்விக்கும் அரசியலுக்கும், கல்விக்கும் சமூக வாழ்வுக்கும், கல்விக்கும் மனிதநேயப் பெறுமானங்களுக்கும் உள்ள உறவு தொடர்பு பற்றியோ இன்னும் கண்களுக்குத் தெரியாத நுண்இழைத் தொடர்புகள் பற்றியோ பரந்தளவு பேசப்படுவதில்லை. மாணவர்; பெற்றோர், மக்கள் என்போரின் மத்திக்கு அவை பற்றிய விளக்கங்கள் கொண்டு செல்லப்படுவதில்லை. இவற்றை ஆளும் அதிகார வர்க்கங்கள் உரியவாறு முன்னெடுக்க முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர். காரணம் அவர்களது உயர் வர்க்க நிலைப்பாடேயாகும்.

> பணத்திற்காக அலைந்து சமூக அக்கறை இழந்து தன்னையும் இழக்காத அறிஞர்கள், பேராசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் திறந்த பொருளாதாரம் விரித்த வலையின் ஒவ்வொரு கண்ணியிலும் சிக்குப்பட்டு வருபவர்கள் கல்வித் துறையிலும் காணப்படுகின்றனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் கல்வி முன்னேற முடியாது வீழ்ச்சி கண்டு வந்துள்ளமைக்கான இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று தொடர்ச்சியாக வளர்க்கப்பட்டு வந்த வடக்கு–கிழக்குப் போர். இரண்டாவது புகுத்தி நிலை நிறுத்தப்பட்டு வந்த திறந்த பொருளாதாரக் கொள்கை. இவை இரண்டும் ஒன்றை ஒன்று தழுவியே வளர்ந்து வந்துள்ளமை கவனத்திற் குரியதாகும். வடக்கு–கிழக்குப் போரினால் கல்வி சகல முனைகளிலும் சீரழிக்கப்பட்டது. இது திட்டமிட்ட பேரினவாத உள் நோக்கங்களது செயற்பாடாகவும் அமைந்தது. முன்பு தரப்படுத்தல், திறமைக்கு மறுப்பு போன்றவற்றின் மூலம் செய்யப் பட்டவற்றை பின்பு ஒட்டு மொத்தமாகவே போர் தனது பாதையில் செய்து வருகின்றது. போர் அனர்த்தங்களும் அதன் கொடிய சூழல்களும் வடக்கு–கிழக்கின் கல்வியை பாழடித்து வருகின்றமை விரிவாக நோக்கப்படல் வேண்டும்.

அடுத்து திறந்த பொருளாதாரக் கொள்கை தனது இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற விதமான கல்விக் கொள்கைகளைப் பின்பற்றுமாறு வற்புறுத்தி நிர்ப்பந்தித்து வந்துள்ளது. அதனை முன்னைய ஆட்சியினரும் இன்றைய ஆட்சியினரும் தொடர்ச்சி யாக முன்னெடுத்து வருகின்றனர். திறந்த பொருளாதாரக் கொள்கை என்பது தனியே பொருளாதாரம் மட்டும் சார்ந்த ஒன்றல்ல என்பது விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். அது பண உறவைச் சகலத்திற்கும் மேலால் முன்னிறுத்தி கல்வியும் பணத்திற்கான வழிமுறை என்பதை நிலைநாட்டி வருகிறது.

இன்று பாடசாலை ஆசிரியர் தனியார் கல்வி நிலையத்தில் பணம் பண்ணுவது தொடக்கம் பல்கலைக் கழக பேராசிரியர்கள் கட்டுரைகள் பக்கம் பக்கமாகப் பணத்திற்காக எழுதி வருவது வரை ஆழ்ந்த அவதானிப்புக்கு உரியதாகும். ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் கருத்தரங்கு ஒன்றில் ஒரு கட்டுரை சமர்ப்பிப்பதால் ஐயாயிரம் ரூபா கிடைக்கிறது. கொப்பி பார்க்க எந்தப் பெரிய பேராசிரியராலும் இருப்புக் கொள்ள முடிவதில்லை. சமூக அக்கறைக்கு மேலால் பணம் கல்வியை, அறிவு ஆற்றலை விலை பேசுகிறது. பணத்திற்காக அலைந்து சமூக அக்கறை இழந்து தன்னையும் இழக்காத அறிஞர்கள், பேராசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் திறந்த பொருளாதாரம் விரித்த வலையின் ஒவ்வொரு கண்ணியிலும் சிக்குப்பட்டு வருபவர்கள் கல்வித் துறையிலும் காணப்படுகின்றனர். அதே நேரம் இன்று பணம் தேடுவதற்கு கல்வி தேவையற்றது என்று மற்றொரு கண்ணோட்டமும் காணப்படுகிறது. அதுவும் கூட திறந்த பொருளாதாரத்தின் பிரதி பலிப்பே ஆகும்.

மேலும் திறந்த பொருளாதாரம் நமக்கு அதிகரித்து வரும் மிகப்பெரிய நாசம் கலாச்சாரச் சீரழிவுகளாகும். இதனால் நமது இளம் தலைமுறையினர் குறிப்பாக மாணவர்கள் அதனுள் மூழ்கி வருகின்றமையாகும். ஒலிபரப்புகள், ஒளிபரப்புகள் ஆகியன போட்டி போட்டு புற்றீசல்கள் போல் தமது சேவைகளை நடாத்தி வருகின்றன. இருபத்திநாலு மணிநேர சேவைகளின் ஊடாக பயனற்றவைகளையும் மிகவும் மலிவான ஆபாசங்களையும் இளைஞர் உள்ளங்களில் நச்சு விதைகளாக ஊன்றி வருகின்றன. மறுபுறத்தில் போதைவஷ்துப்பாவனை பாடசாலை மாணவர்கள் வரை தாராளமாகப் பரவி உள்ளன. இவை யாவும் ஒரு புறத்தில் பண வருவாயுடன் சம்பந்தமுடையதாக விளங்கும் அதேவேளை திட்டமிட்ட வகையில் இளம் தலைமுறையின் எதிர்காலத்தை பன்முக உள்நோக்க அடிப்படையில் திசை திருப்பி விடுவதாகவும் அமைந்துள்ளது. மாணவர்களான இளம் தலை முறையினரிடம் சமூக அக்கறை வேண்டாம், அரசியல் வேண்டாம், அடுத்த மனிதன் பற்றிய அக்கறை வேண்டாம், மனித நேயம், மனித நேயப்பண்பாடு எதுவுமே வேண்டாம். தாரளமாகப் பணம் பண்ணுங்கள். அது எப்படியாகவும் இருக்கலாம். அதற்கு மனச்சாட்சியோ, சமூக நெறிமுறைகளோ எதுவும் தேவை இல்லை. அத்துடன் சகல சீரழிவுகளையும் உங்களுடையதாக்கி அதனைப் பரப்புங்கள். இவ்வாறே நவ காலனித்துவ திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதன் வழி காட்டிகளான அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளும் மாணவர், இளைஞர், யுவதிகளுக்கு மிக எளிதாகக் கற்றுக் கொடுத்து வருபவையாகும். இவற்றை மாணவர்களோடும் கல்வியோடும் இணைத்துப் பார்க்கும் போது பயங்கரக் காட்சிகள் கண்முன்னே விரிகின்றன. ஆனால் அப்படிப் பார்ப்பதற்கு எத்தனை அறிஞர்கள், அறிவு ஜீவிகள், கல்வியாளர்கள் தயாராக உள்ளனர் என்பதே இன்றைய கேள்வியாகும். சமூக அக்கறை, சமூக விடுதலை, சமூக மாற்றம் பற்றி அக்கறைப்படும் அனைவரும் சீரழிந்து வீழ்ச்சியடையும் கல்வித்துறை பற்றியும் அதற்குக் காரணமான போர் சூழல் பொருளாதாரக் கொள்கை பற்றி விரிவாகப் பேச முன்வரல் வேண்டும்.

## வாக்குறுதிகள்

மலையகத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கான பிரசாரங்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. அவை வாக்குறுதிகளின் வடிவில் முன் வைக்கப்பட்டும் வருகின்றன. இவை எல்லாம் பழையவைகளே அன்றிப் புதிதாக ஒன்றுமில்லை. பொதுசன ஐக்கிய முன்னணி, இ.தொ.கா, ம.ம.மு, ஐ.தே.கட்சி ஆகியன வாய்க்கு வந்த விதத்தில் வாக்குறுதிகள் வழங்கி வருகின்றன.

- **மலையகத்தில் 100 தமிழ் கிராம சேவகர்கள் நியமிக்கப் படுவார்கள்.**
- **தமிழ் பிறப்பு இறப்பு பதிவுகாரர் நியமிக்கப்படுவர்.**
- **தொழில் நுட்பக் கல்லூரி உருவாக்கித் தரப்படும்.**
- **காணிகள் பகிர்ந்து அளிக்கப்படும்.**
- **தோட்ட லயன்களுக்குப் பதில் புதிய வீடுகள் கட்டி வழங்கப்படும்.**
- **வீடுகள் சொந்த மாக்கப்படும்.**
- **தோட்ட ஆஸ்பத்திரிகள் அரசாங்க மருத்துவ மனைகளாக்கப்படும்.**
- **மாகாண பிரதேச சபைகளில் தமிழ் மொழியில் கருமமாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.**
- **தோட்டப்புற இளைஞர்கள் நாடு முழுவதிலும் சென்று தொழில் புரிய வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.**
- **தமிழாராச்சிக்கு நிரந்தர செயலகம் தோற்றுவிக்கப்படும்.**
- **இன்னும் இவை வளரும்.**

தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் வாக்குறுதிகள் முன்வைக்கப்படும். ஆனால் மாகாண சபைத் தேர்தல் முடிந்ததும் இவையாவும் மறக்கப்பட்டுவிடும். மீண்டும் பொதுத் தேர்தல் வரும் சமயத்தில் தூசு தட்டி தூக்கப்படும். மலையக மக்கள் ஏமாந்து கொள்ள ஏமாளிகள் அல்லவே.



புதிய இடதுசாரி முன்னணி கொழும்பில் நடாத்திய மேதின ஊர்வலத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் பதாகையின் கீழ் அணிதிரண்டோரில் ஒரு பகுதியினரை இங்கு காணலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# வாஜ்பாயி போட்ட குண்டு

இந்தியா அண்மையில் மேற்கொண்ட அணுஆயுதப் பரிசோதனை இந்தியாவினுள்ளும் வெளியிலும் கடுமையான கருத்து மோதல்களை உருவாக்கியுள்ளது. இந்த விவாதங்களில் நமது கவனத்துக்குரிய சில விடயங்களை இங்கு குறிப்பிடுவது தகும்.

- இந்த அணுகுண்டு வெடிப்பு இந்தியாவின் முக்கிய சாதனையா என்ற கேள்வி முதலில் எழுகிறது.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்ற வகையில் சமுதாயச் சார்பு இல்லாமல் நோக்கும் போது இது ஒரு சாதனைதான். ஆயினும் விஞ்ஞானச் சாதனைகள் எல்லாமே மனித நலனுக்கு உகந்தவையா? மனிதர் கொண்டாட வேண்டியனவா என்று நாம் சோதிக்க வேண்டும். இந்திய விஞ்ஞானிகளும் தொழில் வல்லுனர்களும் இந்திய மக்களின் நலன்கட்காக எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. அவர்களது திறமை ஆயுத உற்பத்திக்குத் திசைதிருப்பப்படுவது கொண்டாட வேண்டிய ஒன்றல்ல என்றே கூற வேண்டும்.

- இந்த அணுகுண்டு வெடிப்பால் இந்தியாவின் பாதுகாப்புக்குச் சிறிது நன்மை இல்லையா என்பது இன்னொரு கேள்வி.

இந்தியா இந்த அணுகுண்டுகளால் யாருக்கு எதிராகத் தன்னைப் பாதுகாக்க முனைகிறது? அமெரிக்கா அணுகுண்டால் தாக்கினால் பதிலடி கொடுக்கும் ஏவுகணை வலிமை இந்தியாவிடம் இல்லை. ரஷ்யாவிடமிருந்து மிரட்டல் இல்லை. அப்படி ஏதாவது ஏற்பட்டாலும் இந்தியாவால் அதற்கு ஈடுகொடுக்க முடியுமா என்பது ஐயமானது. அந்தளவு தூரத்திற்கு இந்திய அணு ஆயுத வலிமையை விரிவு செய்ய முயன்றால் இந்தியப் பொருளாதாரத்தை மிகவும் சீர்குலைக்க நேரிடும். சீனாவையும், பாகிஸ்தானையும் காரணங்காட்டியே இந்திய ஆட்சியாளர்கள் இந்திய ஆயுதப் பெருக்கத்தையும் மேலாதிக்க நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தி வந்துள்ளனர்.

சீனா அமெரிக்காவினது அணு ஆயுத மிரட்டலின் பின்னணியில் சோவியத் யூனியன் அமெரிக்கா தாக்கினால் பாதுகாப்புக்காக அணு ஆயுத உதவி வழங்காது என்ற நிலைமையில் தனது அணுஆயுத ஆய்வையும் குண்டு வெடிப்புப் பரிசோதனைகளையும் மேற்கொண்டது. பிரஷ்னெவ் தலைமையிலான சோவியத் யூனியன் சீனாவுக்கு எதிரான அணு ஆயுத மிரட்டலில் இறங்கியதும் நினைவில் வைக்க உகந்தது. எனவே சீனா தனது அணுஆயுத வலிமையை வளர்க்கும் தேவை இருந்தது. ஆயினும் எந்த நாட்டுக்கு எதிராகவும் முதலில் அணு ஆயுதப் பிரயோகம் செய்யமாட்டாது என்ற உறுதிமொழி சீனாவின் முதலாவது அணுகுண்டு வெடிப்பை அடுத்து வழங்கப்பட்டது. சீனா இன்றுவரை அதிலிருந்து வழுவவில்லை. பாகிஸ்தானின் அணு ஆயுத வலிமை இந்தியாவுடன் ஒப்பிடத்தக்க ஒன்று என்று கூற முடியாது.

எனவே இந்தியா தன்னை ஒரு வலிய பிராந்திய வல்லரசாகக் காட்டும் முனைப்புடனேயே தனது அணு ஆயுதக் கொள்கையை விருத்தி செய்து வந்துள்ளது. இந்தியாவின் ஆட்சியாளர்கள் இந்திய மேலாதிக்கக் கொள்கையினின்று அதிகம் வழுவாமலே இருந்த வந்துள்ளனர். வி.பி. சிங் தலைமையிலான ஜனதா தள ஆட்சியும் அண்மையிற் கவிழ்க்கப்பட்ட கூட்டணி ஆட்சியும் சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் உறவைச் சீர் செய்வதில் மற்ற ஆட்சிகளைவிட அதிக அக்கறை காட்டின என்பது உண்மையே. எனினும் அரச யந்திரம் இன்றும் அன்றும் இந்திய விஸ்தரிப்பு வாதிகளது இறுக்கமான பிடிப்புக்குள்ளேயே இயங்கி வருகிறது என்பதால் நாட்டின் பாதுகாப்பு என்ற பேரில் இந்திய ராணுவ, ஆயுத விஸ்தரிப்பு தொடர்ந்தே வருகிறது.



இன்று தனது அணு ஆயுதச் சோதனைகளை நியாயப்படுத்த சீன மிரட்டல், பாகிஸ்தான் மிரட்டல் என்பன பற்றிப் பேசியதன் மூலம் அமெரிக்காவின் மனதை ஆற வைக்கும் முயற்சியில் வாஜ்பாயி இறங்கியுள்ளார். ஆயினும் இதன் முக்கிய விளைவு பாகிஸ்தானின் அணு ஆயுத விஸ்தரிப்பு துரிதமாவதுதான் என்றே கூற வேண்டும்.

- இந்த அணுகுண்டு வெடிப்பின் மூலம் இந்தியா அமெரிக்கா ஏகாதிபத்தியத்திற்கு முகத்தில் அறைய வில்லையா? என்ற கேள்வி எழலாம்.

அதுவும் உண்மையல்ல. அமெரிக்கா இந்தியாவிற்கு எதிராக கடனுதவித் தடைகள் பற்றிப் கோபமாகப் பேசிய வுடனே அது ஒரு பொருட்டல்ல என்று வீர வசனம் பேசிய வாஜ்யாயி அரசாங்கம் மறுநாளே இந்தியாவின் நிலைமையை அமெரிக்கா கொஞ்சம் அனுதாபமாக நோக்க வேண்டும் என்று சில படிகள் இறங்கி வந்து விட்டது. இப்போது சீனாவைக் காரணங்காட்டி அமெரிக்காவை இரங்க வைக்கும் முயற்சிகள் நடக்கின்றன.

**~~ மோகன் ~~**

ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கில் செய்யப்பட்ட அணு ஆயுதப் பரிசேர்தனைகள் இவை என்றால் இந்தியாவின் நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலைதான். இந்திய அரசாங்கம் அமெரிக்காவிடம் மறைமுகமாக மண்டியிட்டுக் கெஞ்சுகிற நிலையில் தான் தனது செயலை இன்று நியாயப்படுத்துகிறது.

இந்த நிலைப்பாட்டுக்கும் அணுஆயுத உற்பத்தித்தடை உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்த குஜ்ரால் தலைமையிலான அரசு எடுத்த நிலைப்பாட்டின் நியாயத்திற்கும் ஒரு உறவும் இல்லை.

- இந்தியாவை அமெரிக்காவும் அதன் நண்பர்களும் கண்டிப்பதில் நியாயம் உண்டா என்பதும் ஒரு முக்கியமான கேள்வி.

அமெரிக்காவிற்கு எந்த நாட்டினது ஆயுதப் பெருக்கத்தையும் கண்டிப்பதற்கான உரிமை இல்லை. ஆயினும் அதன் இன்றைய உலக ஆதிக்க நிலை மிகுந்த திமிரைத் தந்துள்ளது. அதைவிட த்னது சி.ஐ.ஏ. உளவாளிகட்கும் தெரியாமல் இந்தியா இத்தனை அணு ஆயுதங்களை விருத்தி செய்தது அமெரிக்க எசமானர்கட்கு மிகுந்த கொதிப்பை ஏற்படுத்தி இருப்பது உண்மை.

எந்த நிலையிலும், அமெரிக்கா தனது அணு ஆயுதங்களை அழிப்பதற்கும் ஏவுகணைகளைக் குறைப்பதற்கும் அதன் ஆயுதக் கிடங்குகளைப் பிற உலக நாடுகள் பார்வையிடுவதற்கும் அனுமதிக்காத வரையில் மற்ற எந்த நாட்டுக்கும் உபதேசிக்க அதற்கு அருகதை கிடையாது. மேலை நாடுகளும் ஜப்பானும் மூன்றாமுலக நாடுகளுக்கு ஒரு நியாயமும் மேலை வல்லரசுகட்கு இன்னொரு நியாயமும் பேசுகின்றன. முதலில் மூன்றாமுலகின் மீதான தமது மிரட்டல்களை நிறுத்திவிட்டு அணு ஆயுத ஒழிப்பில் முன்னோடியான முறையில் செயற்பட வேண்டும். அதன் பின்பு உலகுக்கு உபதேசிக்கட்டும்.

- பா.ஜ.க. தலைமையிலான அரசாங்கம் இந்த நடவ்டிக்கைகள் மூலம் சாதிக்க நினைப்பதென்ன என்ற கேள்வியும் எழுகிறது.

பாஜக அரசாங்கம் இந்திய ராணுவ விஸ்தரிப்புக் கொள்கையை உடையது. தனக்கு முந்திய ஆட்சிகளின் ஆயுத விருத்தி நடவடிக்கைகளது பெருமையை இக்குண்டு வெடிப்புக்கள் மூலம் தனதாக்கிக் கொள்ள அது முயன்றுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பின் மூலம் அரசாங்கக் கூட்டாளிகள் மத்தியில் எழுந்துள்ள மோதல்களும் ஊழல் விவகாரங்களும் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியினது வெகுஜன செல்வாக்கை வேகமாகவே கீழிறக்கத் தொடங்கி விட்டது. இதை மூடிக்கட்டி மக்களது கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்தில் உடனடியாக பா.ஜ.க தலைமை சிறிது வெற்றி பெற்று விட்டது. ஆயினும் இந்த மயக்கம் பல காலம் நிலைக்காது. அதற்குள் ஆட்சியாளர்கள் மத்தியிலான குத்துச் சண்டைகள் அமைதிப் படுத்தப்பட முடியுமா என்பது மிகவும் ஐயத்துக்குரியது. இந்த குண்டு வெடிப்புகள் பா.ஜ.க. கட்சியினது ஏகாதிபத்திய விரோத வேஷத்தையும் வெகு விரைவில் அம்பலப்படுத்தி விடும் என்பது மிகவும் சாத்தியமானது.

தொகுத்துக் கூறினால் 24 ஆண்டுகள் முன்னம் நடத்திய சோதனையின் பின் மேலும் அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்துவது இல்லை என்று இந்தியா தானாகவே கடைப்பிடித்து வந்த தீர்மானம் மக்களுக்கோ பாராளுமன்றத்துக்கோ எவ்வித விளக்கமும் இல்லாது மீறப்பட்டுள்ளது. இதற்கான தேவை என்னவென மக்களுக்கு விளக்கப்படவில்லை.

மக்களுக்கான விஞ்ஞானம், மக்களுக்கான தொழில் நுட்பம் என்ற தேவைகள் ஆட்சியாளர்களால் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு ஏகாதிபத்திய நலன்கட்கு வசதியான அணுகுமுறைகளே ஊக்குவிக்கபட்டு வந்தள்ளன. இந்திய அணு ஆயுதப் பரீட்சை இன்று எழுப்பியுள்ள விவாதம் இந்தப் பிரச்சினையுடன் நின்றுவிடாது விஞ்ஞானம், தொழில்நுட்பமும் பற்றிய விரிவானதும் அடிப்படையானதுமான வினாக்களை எழுப்பி நல்ல விடைகளைத் தேடவேண்டும்.

# சிவனு லெட்சுமணனுக்கு நினைவு ஸ்தூபியாம்

சிவனு லெட்சுமணனின் நினைவாக ஸ்தூபி ஒன்றை மத்திய மாகாண சபைக்கூடாக கட்டப்போவதாக கடந்த ஐந்து வருடங்களாக மாகாணசபை உறுப்பினராக இருந்து வரும் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் ஒரு மாத காலம் இருக்கும் போதுதான் இவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

சிவனு லெட்சுமணன் சுட்டுக் கொல்லப்பட்ட தினத்தன்று அவரை அடக்கம் செய்த இடத்துக்கு சென்று மலர் வளையமொன்றை வைத்ததாகவும் சாமிமலையில் நடைபெற்ற அவரின் தொழிற்சங்க கூட்டமொன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு தொடாந்த பேசுகையி லேயே மேற்படி நினைவு ஸ்தூபி கட்டப் போவதாக ரீலையும் விட்டிருக்கிறார்.

அவர் மாகாணசபை உறுப்பினராக இருந்து வருகின்ற கடந்த 5 வருடகாலமாக அவருக்கு சிவனுலெட்சுமணனை பற்றி நினைவு கூட வரவில்லை. மாகாணசபை ஆட்சிக்காலம் முடிவடைந்து தேர்தல் நடைபெற இருப்பது நினைவுக்கு வந்த பிறகுதான் சிவனு லெட்சுமணன் பற்றி நினைவு வந்திருக்கிறது.

சிவனு லெட்சுமணன் நினைவாக பெரியதொரு சமாதியை கட்டப் போவதாகவும், மணிமண்டபம் கட்டப்போவதாகவும் காலத்துக்குகாலம் கூறிவந்தவர்கள் அவர்களின் பொய்யும் புரட்டும் காரணமாக மக்களிலிருந்து ஓரம் கட்டுப்பட்டு விட்டனர்.

சிவனு லெட்சுமணன் பங்கெடுத்த போராட்டம் அவரின் தியாகம் என்பன மலையக மக்களின் போராட்ட வரலாற்றில் முக்கிய அம்சங்களாகும். அவற்றை வைத்து மக்களின் வாக்குகளை பெற நினைப்பது அயோக்கியத்தனம். அத்தியாகியின் நினைவாக ஏதாவது செய்ய நினைத்தால் மாகாண சபைக்கூடாகத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை.

மாகாணசபை உறுப்பினராக வருவதற்கு முன்னர் மலையகத் தியாகிகள் பற்றி (தகவல்கள் பல பிழையாக இருந்த போதும்) புத்தகம் எழுதி வெளியிட்ட மேற்படி தொழிற்சங்கத் தலைவர் குறைந்த பட்ச இதயசுத்தியுடனாவது இருக்க வேண்டும்.

அதே வேளை சிவனு லெட்சுமணனின் தியாகத்தினால் ஆகர்சிக்கப்பட்டு மக்களுக்கான அரசியலில் ஈடுபட்டுவரும் மலையகத்தைச் சேர்ந்த மார்க்சிஸ்டு லெனினிஸ்டுகள் தேர்தல்கள் வந்தாலும் வரா விட்டாலும் இதய சுத்தியுடன் அத்தியாகத்தை தொடர்ந்து நினைவு கூர்கின்றனர்.

**ப. சிவசாமி**
**சாமிமலை**

ஆசிரியர்,
புதிய பூமி

அன்புடையீர்!

நம்பூதிரிபாத் பற்றிய கட்டுரையில் (புதிய பூமி, மே 98) அவரது சிறப்பான பங்களிப்புக்கள் மிகவும் சீரிய முறையில் முன்வைக்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியது. நமது நாட்டினது இடது சாரித் தலைவர்கள் பலர் அவரிடமிருந்து கற்க வேண்டிய நற்பண்புகள் உள்ளன. நேர்மை, கடுமையான உழைப்பு, எளிமை, மக்கள் நலன் பற்றிய கரிசனை, உலகளாவிய பார்வை என்பன அவரது அரசியல் வலிமையின் இரகசியங்கள். ஆயினும் அவரது மாக்ஸிய அணுகு முறையில் சில பாரிய குறைபாடுகள் இருந்தன. ஸ்தாலின் பற்றிய அவரது அண்மைக்கால மதிப்பீடுகள் மாக்ஸிய-லெனினிஸ நிலைப்பாட்டுக்கு உடன்பாடானவையல்ல. மாஓ பற்றிய அவரது கணிப்பீட்டிலும் குறைபாடுகள் அதிகம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இன்று சீர்திருத்தவாத பண்புகளையுடைய ஒரு கட்சியாகவும் வெகுஜனப் போராட்டத்தினின்று விலகிப் பாராளுமன்றப் பாதையில் சறுக்கிச் செல்லும் கட்சியாகவும் ஆனதில் அவருக்கு சிறிது பங்கேனும் உண்டு. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையிலும் ஆயுதம் ஏந்திய போராட்டங்கள் தொடர்பாகவும் அவரது கட்சியின் தவறுகளும் கவனுத்துக்குரியன. இத்தவறுகட்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவரது சில தவறுகளுக்கு அவருக்கு அப்பாற்பட்ட காரணங்கள் சிலவும் இருந்திருக்கலாம். ஆயினும் அவர் பற்றிய மதிப்பீட்டில் அவரது அரசியற் குறைபாடுகள் பற்றியும் சிறிது கூறி விளக்கியிருந்தால் கட்டுரை முழுமையானதாயிருக்கும்.

அன்புடன்
**ஜெகன்**

நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தம் நிறுத்தப்படாது நீடித்தால் அந்நிய சக்திகள் புகுந்து கொள்ளும்

## யாழ். மேதினக் கூட்டத்தில் எச்சரிக்கை!

நாடு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொன்விழாக் கொண்டாடப் பட்டது. அதேவேளை நாட்டின் வடக்கு கிழக்கில் கடுமையானதும் கொடுமை மிகுந்ததுமான யுத்தம் நடாத்தப்படுகிறது. யுத்த அவலங்கள் மத்தியிலும் பொருளாதார நெருக்கடிகளின் மோசமான நிலையிலும் சுதந்திரம் கொண்டாடப்பட்டால் அந்த சுதந்திரத்தின் அர்த்தம் தான் என்ன? இந்நிலையில் தொடர்ந்தும் பேரினவாத ஒடுக்குமுறைக்கான இவ் யுத்தம் முன்னெடுக்கப்பட்டால் நாடு அழிவுறுவதுடன் அந்நிய சக்திகளின் காலடிக்கே முழு மக்களும் இட்டுச் செல்லப்படுவார்கள். இத்தகைய அபாயத்தைவிட வேறு எதைத்தான் இந்த யுத்தம் சாதிக்கப் போகிறது. எனவே தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை உள்ளடக்கிய நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதும் அதனை விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தமிழர் அமைப்புக்களுடனும் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தையின் மூலம் உரிய இணக்கப்பாட்டிற்கு வந்து கொள்வதும் அவசியமாகும். அதற்கு உடன் யுத்தத்தை நிறுத்துவது உடனடித் தேவையாகும்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தில் புதிய ஜனநாயக கட்சியின் வடபிரதேச கமிட்டி நடாத்திய மேதினக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய கலை இலக்கியப் பேரவையின் "தாயகம்" ஆசிரியர் தோழர் க. தணிகாசலம் கூறினார்.

மேற்படி மேதினக் கூட்டம் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் தோழர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமை உரையில் இன்று வடபிரதேசத்தின் தொழிலாளர்கள், விவசாயிகள், அரசாங்க தனியார் ஊழியர்கள், பாடசாலை–பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் பலவித கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் எதிர் நோக்கிய வண்ணமே அன்றாட வாழ்க்கையை நடாத்த வேண்டியுள்ளது. விவசாயிகள் மிகக் கஷ்டப்பட்டு உற்பத்திகளைச் செய்தாலும் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாது மிகக் குறைந்த விலைகளில் விற்று மீண்டும் மீண்டும் நட்டமடைகின்றனர். மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வும் சீரழிந்த ஒன்றாகவே காணப்படுகிறது. மாணவர்கள் ஒழுங்காகக் கல்விபெற முடியாது கஷ்டப்படுகின்றனர். இயல்பு வாழ்க்கை என்பது சமாதானம் இன்றி வேறு எந்த வழிகளாலும் ஏற்பட மாட்டாது. சமாதானம் வர வேண்டுமானால் யுத்தம் நிறுத்தப் பட வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் மட்டும் குரல் கொடுத்தால் போதாது சிங்கள மக்களுடன் இணைந்து நின்று உறுதியான யுத்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கூறினார்.

நவலங்கா தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் கா. பஞ்சலிங்கம் தமதுரையில் தொழிலாளர் வர்க்கம் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதற்கு சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள் தொட்டு யாழ்ப்பாணத் தொழிலாளர்கள் வரையான போராட்ட வரலாறு நமக்கு பல உண்மைகளை எடுத்துக் காட்டியுள்ளது. வடபகுதியில் தொழிற் சங்க இயக்கத்தை கம்யூனிஸ்ட் கட்சியினரே கட்டியெழுப்பி தொழிலாளர் உரிமைகளைப் பெற்றெடுத்தனர். உதாரணத்திற்கு யாழ்–மாநகரசபையில் தொழிலாளர்கள் ஊழியர்கள் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே நீண்ட காலம் இருந்து வந்தனர். அத்தகைய நிலையை மாற்றி தொழிலாளர்களை அணிதிரட்டி விட்டுக் கொடுக்காத போராட்டங்களின் மூலம் உரிமைகள் பெறப்பட்டன. இனிமேலும் நமக்கு முன்னால் உள்ள பாதை தொழிலாள வர்க்கப் போராட்டப் பாதையே ஆகும் என்று கூறினார்.

அடுத்து தோழர் கு. மோகன் தமதுரையில் வட பகுதியில் இடதுசாரி இயக்கம் கடந்த காலங்களில் தாக்கம் மிக்க தொழிற்சங்க அரசியல் சமூகப் போராட்டங்களை நடாத்தி வந்துள்ளது. அந்தப் போராட்டங்களில் மக்கள் அணிதிரண்டிருந்தனர். அதனால் மக்கள் போராட்டங்கள் வெடித்தெழுந்து முன்சென்றன. சாதிய–தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களால் மறுக்கப்பட்ட சமத்துவ உரிமைகள் பெறப் பட்டதுடன் தமிழர் மத்தியிலான ஐக்கியத்திற்கும் அது பயன்படுத்தப் பட்டது. இப் போராட்டங்களில் இடதுசாரி–கம்யூனிஸ்ட் தலைவர்களும் தொண்டர்களும் மக்களும் செய்த தியாகங்கள் என்றும் மறக்கப்பட முடியாதவையாகும். எதிர் காலத்தில் அப்பாதைதான் முழு மக்களினதும் விமோசனத்திற்கு வழிகாட்டக் கூடியதாகும் என்றும் கூறினார்.

வட பகுதியின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெண்கள் யுவதிகள் உட்பட பெருந்தொகையான மக்கள் இம் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மேலும் தோழர்கள் த. தருமலிங்கம், பொ. முருகேசு, தி. இராம்குமார், செல்வி கு. பாலினி, செல்வி கே. ஞானரஞ்சினி ஆகியோரும் உரையாற்றினர்.

## பலி

பூசாரி கூவுகிறான்:
"தின்பண்டம் கொண்டு வா
திரவவகை கொண்டு வா
என்னுடைய சாமி பசியாற வேண்டுமே
இன்னமும் நீ நிற்பதேன்
சொன்னதெலாம் கொண்டு வா"

பூசனியின் காய் அறுத்தோம்
பலகாரம் பழவகைகள்
பற்பலவும் நாம் படைத்தோம்
பொங்கல் உலை வைத்தோம்
பால் மோரோடிளநீரும் போதாத சாமிக்குச்
சாராயம் கள்வகைகள் சீராக நாமீந்து
கோழி அறுத்தோம். ஆடும் பலி தந்தோம்
காசு பணந் தந்தோம். கட்டிடவும் துணி தந்தோம்

உரக்க உடுக்கடித்துப் பூசாரி கூவுகிறான்:
"தின்பண்டங் கொண்டுவா
திரவவகை கொண்டுவா"

லட்சக் கணக்காக மானிடரின் உடலங்கள்
வெட்டி வழிந்த வெங்குருதி குடக்கணக்காய்க்
கொட்டிக் கறுத்த தரைமீது நின்றபடி
பறையொலி போல் வேட்டதிர அழுகையொலி சங்கூத
வெறியோடிச் சிவப்பான விழிகள் கனல் கக்க
உடுக்கடித்துப் பூசாரி உருவாடிக் கூவுகிறான்:

"கோழிகளும் ஆடுகளும் கொண்டு பசி தீருவதோ
சாராயம் கள்ளருந்திக் தாகமிதும் தணிகுவதோ
பத்தாயிரம் உயிர்கள் பலிகேட்கும் தெய்வமிது
ரத்தத்தைக் கொண்டுவா, நரபலியைக் கொண்டுவா
கிழடுபட்ட தசை வேண்டாம்
இளைய பரம்பரையின் இனிய தசை கொண்டுவா
பட்டம் பதவி பல அதிகாரம் பணமுடையோர்
பெற்றெடுத்த பிள்ளைகளின் ஊளைச் சதை வேண்டாம்
சிங்களத்தின் ஏழைகளின் சிறுவர்களைக் கொண்டு வா
பச்சை கறுப்போடு பழுப்பாடை அணிவித்து
ஒட்ட முடி நறுக்கித் தொப்பி தலைக் கேற்றிச்
சப்பாத்துக் கால்களுடன் போர்ச்சாமி சந்நிதியில்
வெட்டிச் சரிக்கப் பத்தாயிரம் புதல்வர்
கட்டி இறுக்க கயிற்றால் பிணைத்தெனினும்
கட்டாயமாய் எனது களத்தினிக்குக் கொண்டு வா"

--ஸ்வப்னா

# இப்படி நடக்கிறது

**கொழும்பில் ஒரு சோதனைத் தடை மையத்தில் கார் ஒன்று மறிக்கப்படு கிறது. கார் ஓட்டி வந்தவர் கீழே இறங்கி நிற்கிறார். கார் சல்லடை போட்டு சோதிக்கப் படுகிறது. நாயும் விடப்படுகிறது. முடிந்ததும் கார் ஓட்டி வந்தவரை ராணுவத்தினர் கேள்வி கேட்கின்றனர். நீர் தமிழரா? சிங்களவரா? ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் என்பதில் கேள்வி தொடுக்கிறார். இல்லை உமது உருவ அமைப்பைப் பார்த்தால் தமிழர் போல் காணப்படுகிறீர்? ராணுவத்தின் கேள்வி இது. சரிதமிழராக இருந்தால் என்ன? இல்லை தமிழர்கள் என்றால் சந்தேகம்தான். அடையாள அட்டையைத் தாரும். காரில் வந்தவர் அடையாள அட்டையைக் கொடுக்கிறார். அதில் அவர் சிங்களவர் என்பதும் சட்டத்தரணி என்பதும் உறுதிப் படுத்தப்படுகிறது. ராணுவத்தினர் மன்னிக்கவும் கூறி அவரைப் போகச் சொன்னார்கள்.**

**வெசாக் தினத்தன்று ஒரு சோதனைத் தடைமையத்தில் ஒரு நடுத்தர வயதுடைய ஒருவர் மறிக்கப் படுகிறார். நேரம் இரவு ஏழு மணி. அடையாளம் விசாரிக்கப்படுகிறார். நீ தமிழனாக இருப்பதால் உன்னை டீ.ஓ. போட்டு உள்ளே தள்ளிவிட எங்களால் இயலும். அதட்டல் உறுமல். அத்தமிழருக்கோ அச்சம் அதிகரிக்கிறது. சிறிது நேரத்தில் சரி ஒரு போத்தலுக்கு ஏதாவது வழி செய்து விட்டு போய்விடு. இது ஆணை. இல்லாவிடில் உள்ளேதான். இது அதட்டல். பாவம் உள்ளே போவதைவிட வழி செய்து விட்டு போய் விடுகிறார் அந்தத் தமிழர்.**

## கௌரவமான பிச்சைக்காரர் இலங்கையர்

அண்மையில் உலக வங்கியின் சிரேஸ்ட உப தலைவரும் பிரதான பொருளாதார நிபுணருமான ஜோசப் ஸ்டிக்லிற்ஸ் கொழும்பில் தங்கியிருந்த போது இலங்கையர் தென் கிழக்காசிய்வில் உள்ள ஏனைய வறியவர்களோடு ஒப்பிடுகையில் சிறந்த நிலையில் இருப்பதாக தெரிவித்தார்.

மிக மோசமான பட்டினி மட்டம் எனச் சர்வதேச ரீதியில் குறிப்பிடும் போது ஒரு தனி நபருடைய நாளாந்த வருமானம் ஒரு அமெரிக்க டொலராகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் வாழும் ஐந்து பேரில் இரண்டு பேர் அதாவது 50 கோடி மக்கள் ஒரு நாளைக்கு ஒரு டொலருக்கு கீழ் வருமானம் பெறுகின்றனர்.

நேபாளத்தில் தலா வருமானம் 210 டொலராகவும் இலங்கையில் தலா வருமானம் 740 டொலராகவும் உள்ளது. எனவே இலங்கை மக்கள் பிராந்தியத்தின் ஏனைய மக்களை விட சிறப்பாக இருப்பதாக ஆறுதல் கூறுகிறார். உலக வங்கியின் உப தலைவர். இலங்கையின் தலா வருமானம் (வருடத்திற்கு) 740 டொலர் என்றால் ஒரு நாள் வருமானம் இரண்டு டொலர்களாகும்.

வட அயாலாந்து....
6ம் பக்க தொடர்ச்சி

மொத்தமாகக் கூறினால் இன்றைய தீர்வு இன்றைய வரலாற்றுச் சூழலில் இயலுமான அளவிற்குள் அயர் லாந்தின் விடுதலைப் போராட்டம் பெற்றுள்ள ஒரு வெற்றியாகும். இது முழுமையான வெற்றி அல்ல. இது நியாயமான ஒரு தீர்வினும் குறைவான ஒன்றுதான். எனினும் மக்கள் விரும்பும் அமைதியைக் கொண்டுவரும் அளவில் வரவேற்க உகந்தது. நீண்ட காலத்தில் நீதியான, முழுமையான தீர்வை நோக்கி இந்த உடன்படிக்கை நகரத் தவறுமேயாயின் அது முன்னைவிடக் கொடிய விளைவுகளையே தரும்.

வட அயர்லாந்தையும், பாலஸ்தீனத்தையும் ஒப்பிட்டு நிதானமான அணுகுமுறையின் வெற்றி பற்றிப் பேசுவோர், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதமேந்தும் வரை ஏன் இந்த நிதானமான அணுகுமுறைகள் எழுவதில்லை என்பதையும் ஆராய்வது தகும்.

## குன்றென நிமிர்ந்தார்

சங்கே முழங்கு! சரிநிகர் சமனாய் எங்கள்
தோழர் எழுந்திட்டார் இந்நாளில். முன்றில்விட்டு
முன்னே விரைந்தார். முதுகொடிய உழைக்கும்
அன்னவர் தாம் எங்கள் நண்பர்! அவர் வகுத்த
பாதை சென்றிடுவோம் நாம்! கங்குல் மடிய
ஒருகாலை இங்கெழும்! பொன் விரித்த இரவி
செங்கதிர் எறிந்து சிரித்திடும். செவ்வொளியில்
நின்றாடிக் களித்திடுவர் - நிமிர்ந்திடுவர் நம் நாயகர்!

வையத் திருவை வளர்த்தெடுக்கும் தோழர்!
உய்தி பெறுவார், உலகாள்வார் மெய்யாய்
விரும்பும் படியாய் நிதம் உழைத்து மண்வாழச்
செய்திடுவார். எய்தும் இலக்காய் அதையே
கனவிலும் நனவிலும் கொண்டே மெய்தேய
வருந்திடுவர். மிகு சுவை அள்ளி அளித்திடலாயினர்.
ஆயினும் என்! வைய நடந்ததவர் வாழ்வு பேசல் துயரே!

கையளவு மனசிலே கனவு நிறைந்தவர்
வாழ்ந்திடினும் உய்ய வழியிலாது ஒரு சாரர்
செய்ய விழையும் ஒரு செயலாலே பூமி சோர்ந்தது.
தாய்நிலம் வலிமை குன்றி பலம் இழந்தது.
செய்ய திருவும் அகன்றது. ஐயன் இவன் வழி
இருள் நிறைந்தது. செங்குருதி பாய்ந்தன்னவர்
நிலம் சோர்ந்திடினும் குன்றிடோம் நாம்!
குவலயம் எம்வசம்! ஆர்த்திடும் நம்மவர் வாழ்கவே!

வாழ்கவே நம்தொழிலாளர் வளர்கவே! வளர்கவே!
செங்கொடி நின்றாடும்! போர் முரசம் வீறிடும்!
நன்று உணருங்கள் மே நன்நாள் இந்நாள்!
எண்திசையும் மக்கள் கூடி எழிலார்ந்த செயல்
முனைந்தார். குன்றென நிமிர்ந்தார். குன்றிடாது
திண்வழி தொடர்ந்தார். தீமை இருள் கடிந்தே
பாதை விரைந்தே பல்லாயிரர் விழி சுடர
தீ சுமந்து நின்றார்த்தார்! திசை வழி பாய்ந்தார்!

--பவித்திரன்

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
PUTHIYA POOMI පුදියපූමි
சுற்று 05 ஜுன் 1998 பக்கம்-12 விலை ரூபா 10/= சுழற்சி 20

# மலையக குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரிகள் யார்?

மலையகத்தில் ஆங்காங்கே குறிப்பிடத்தக்க குண்டு வெடிப்புகள் இடம்பெற்று வருகின்றன. ட்ரான்ஸ் போமர்கள் எண்ணெய் தாங்கிகள் சில இக்குண்டு வெடிப்பால் நாசமாக்கப் பட்டன. அண்மையில் அட்டனில் செனன் தோட்ட தொழிற்சாலையில் குண்டு வெடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் நோக்கம் அர்த்தம் எவருக்கும் புரியவில்லை. இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. பொலிசாரும் உரியவர்களை கண்டு பிடிக்கவில்லை. இது மலையகத்தில் மட்டுமன்றி தென் இலங்கையில் பர்வலாக நடைபெற்று வருகிறது.

ஆனால் மலையகத்தில் இத்தகைய விஷமச் செயல் மூலம் ஒருகெடுபிடி நிலையை தோற்றுவிக்க சிலர் முயலுகிறார்கள் என்பது மட்டும் புலனாகிறது. மலையகத்தில் பயங்கரவாதம் வந்துவிட்டது என்றும் அங்கு புலிகள் ஊடுருவி விட்டார்கள் என்றும் புரளி கிளப்ப இனவாத சக்திகளுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அடுத்து மாகாணசபைத் தேர்தல் வரும் இன்றைய சூழலில் தத்தமது அரசியல் லாபத்திற்காக எதிரே உள்ள இளைஞர்களைப் பழிவாங்கவும் சந்தர்ப்பம் தோன்றியுள்ளது. மலையக இளைஞர்களைப் பழிவாங்கவும் தொழிலாளர்களின் உணர்வுகளை மழுங்கடிக்கவும் திட்டமிட்ட வகையில் கெடுபிடி நிலையை தோற்றம் பெறச் செய்யும் விஷமத்தனமான குண்டு வெடிப்புகளை கண்டுபிடிக்க வேண்டும். இவை மக்கள் விரோத செயல்களேயாகும். இதன் உண்மைச் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

# தனியார் மயத்தை விரைவு படுத்துக!! உலக வங்கி ஆணை!

இலங்கையின் இன்றைய பொருளாதார கட்டமைப்பை வழிநடத்தி வருவதில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதி நிறுவனமும் கட்டளை அதிகாரிகளாகக் காணப்படுகின்றன. அவர்களது ஆணை இன்றி இலங்கையின் பொருளாதாரத்தில் அணுவளவு கூட அசைக்க முடியாத அளவுக்கு தமது பிடிக்குள் இறுக்கி வைத்துள்ளன. கடந்த அரசாங்க காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட தனியார் மயப்படுத்தல் இன்றைய அரசாங்கத்தின் கீழ் மிக வேகமாக முன் சென்று கொண்டிருக்கின்றன.

இத் தனியார் மயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை மிகவும் நேர்த்தியாக முன்னெடுத்து வருவதற்காக இலங்கை அரசாங்கத்தையும் அதன் ஜனாதிபதியையும் அமெரிக்கா மிகப் புகழ்ந்தும் பாராட்டியும் வருகின்றது. அண்மையில் அமெரிக்க ஜனப் பிரதிநிதிகள் சபையில் புகழாரங்கள் சூட்டப்பட்டன. இலங்கையின் கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரட்ண ஒரு வைபவத்தில் தனியார் மயத்தை துணிவுடன் மேற்கொண்டு வரும் ஜனாதிபதிக்கு வாழ்த்தும், புகழ் மாலையும் வழங்கி உள்ளார். தறிகெட்டு நிற்கும் இத்தனியார் மயத்தை அரசாங்கத்தினுள் பதுங்கி இருக்கும் இடதுசாரிகள் வாய்விட்டு எதிர்க்கத் துணிவற்று நிற்கிறார்கள். இன்றைய உலக போக்கை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என வியாக்கியானமும் கொடுக்கிறார்கள் அந்த முன்னாள் இடது சாரியினர். அதேவேளை அரசாங்கத்திற்கு வெளியே உள்ள இடதுசாரி சக்திகள் தனியார் மயத்தையும் அதன் எதிர்கால பாரிய நாச விளைவுகளையும் சுட்டிக் காட்டி எதிர்த்து வருகிறார்கள்.

ஏற்கனவே ரெலிகொம் நிறுவனத்தின் 35 வீதப் பங்கு யப்பானிய நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டு விட்டது. அண்மையில் எயர் லங்காவும் எமிட்றேட்ஸ் நிறுவனத்திற்கு 40 வீதப் பங்கால் விற்கப்பட்டு விட்டது. ஏற்கனவே நாட்டின் துணி ஆலைகளும் ஏனைய அரச கூட்டுத்தாபனங்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவை முற்றிலும் தனியாருக்கு வழங்கப்பட்டன. முக்கியமாக பெருந்தோட்டத் தொழில் துறை தாரை வார்க்கப்பட்டது. அதன் தீய விளைவுகளை இன்று தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

இதே வழியல் அண்மைய உலக வங்கியின் ஆணை வெளி வந்துள்ளது. தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டையும் தனியார் மயப்படுத்த வேண்டும் என்பதாகும். இலங்கையில் அன்று ஆதிக்கம் செலுத்திய 'ஷெல்' 'மோபிள்காஸ்' 'கல்ரெக்ஸ்' போன்ற இராட்சத அந்நிய எண்ணெய் கம்பெனிகளை நாட்டைவிட்டுத் துரத்தியவர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா. நஷ்டஈடு கூட கொடுக்க மறுத்தவர் அவர். ஆனால் இன்று அவரது மகள் மூலம் பிரதமர் கண்களை மூடிக்கொள்வதற்கு முன்பாகவே மீண்டும் இலங்கையில் அவ் எண்ணெய்க் கம்பெனிகள் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முயன்று நிற்கின்றன. அது உலக வங்கியின் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி இந்த ஆணைக்குப் பணியவே போகிறார். ஏனெனில் அவரிடம் தேசிய பொருளாதாரம் பற்றிய பழையதும் இல்லை. புதியதும் கிடையாது. முற்றிலும் ஏகாதிபத்திய சரணடைவுப் போக்கே உள்ளது. தென் கொரியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்றவற்றின் படிப்பினைகளைக் கூட சிறு அளவில்தானும் கணக்கில் எடுக்க மறுப்பது நாட்டை நாசப்படுத்துவதற்கேயாகும்.

## திருமலை....

1ம் பக்க தொடர்ச்சி

ஜனாதிபதிவரை விடயம் விபரமாக்கப் பட்டுள்ள போதிலும் நீதியின் பக்கம் எவரும் நிற்பதாகத் தெரியவில்லை.

திருகோணமலை சிங்களவர்களது பிரதேசம். தமிழர்கள் வந்தேறு குடியினர். எனவே அதனை சிங்களவர்களுடையதாக்க வேண்டும். என்பதை மறைந்த ஜே.ஆர். கூறிச் சென்ற பேரினவாதப் பொன்மொழிகளாகும். எனவே அந்த திசையில்தான் திருகோணமலை ஆளும் தரப்பினரால் நோக்கப்படுகிறது. ஒவ்வொரு செயலும் அவ்வாறே முன்னெடுக்கப்படுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகரத்தைப் பராமரிக்கும் நகர சபையினால் ஒரு சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்து திறக்க முடியாத அளவுக்கு பேரினவாதப்பிடி இறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறிய விடயத்திற்கே பேரினவாதம் விட்டுக்கொடுக்கவில்லை என்றால் தமிழர்களின் நியாயமான உரிமை விடயத்தில் எந்தளவிற்கு விட்டுக் கொடுக்கப் போகிறது. இத்தனைக்கும் அரசாங்கத்துடனும், ஜனாதிபதியுடனும் நெருங்கி நின்று விருந்துண்டு அரசியல் நடாத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய சந்தை திறப்பு விடயத்தில் மௌனம் கொண்டு இருக்கிறது. திருமலை பா. உ. இரா சம்பந்தன் அவர்கள் தனது புற முதுகைக் காட்டி நிற்கிறார். தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வந்தால் போதும். அன்று தொட்டு இன்றுவரை தமிழர் தலைமைகளின் வரலாறே அவ்வாறு அமைந்து விட்ட ஒன்றேயாகும்.

எனவே புதிய சந்தையைத் திறந்து வைக்க திருகோணமலையின் மூவின மக்களும் நீதி நியாயத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து செயலாற்ற முன்வரல் வேண்டும். இனவாதம் கிளப்பும் முதலாளிகளினதும் அவர்களுக்கு குடை பிடிப்போரையும் மக்கள் அம்பலமாக்குதல் வேண்டும்.

## மலையக மக்....

1ம் பக்க தொடர்ச்சி

இன்றைய சூழ்நிலையில் தொழிற் சங்கங்களில் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இல்லையென்று தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியை சேர்ந்த தலைவர் ஒருவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இச்சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள தோட்டங்களுக்குச் சென்ற ஐ.தே. கட்சி பிரமுகர்கள் பலர் விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் பணத்தையும் செல்வாக்கையும் கொண்டு ஐ.தே. கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்த பெரும்பாடுபட்டு வருகின்றனர். எனினும் தோட்டத் தொழிலாளர்கள் இவர்களை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இந்த நிலைமையில் புதிய தலைமையை கட்டி வளர்க்கும் புதிய பாதையில் மலையகம் மிகவும் வேகமாக பயணம் செய்வதை அவதானிக்க முடிகிறது. அப்பயணத்தில் எல்லா சக்திகளையும் ஐக்கியப்படுத்தி முன்னேறுவதில் மலையகத்திலிருக்கும் மாக்சிஸ்ட் லெனினிஸ்டுகள் முன்னணியில் இருக்கின்றனர். கொள்கைரீதியாக மட்டுமன்றி அமைப்பு ரீதியாகவும் புதிய மாதிரிகளையும் அவர்கள் செயற்படுகின்றனர். அதாவது மலையக மக்களின் மீது நேர்மையாக அக்கறையுடைய சகல சக்திகளையும் பொதுவேலைத் திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுத்தும் நடை முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## அரசியல்..........

1ம் பக்கத் தொடர்ச்சி

மண்ணிலேயே அவதியுறும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கே பாரிய பிரச்சனைகள் உண்டு.

ஒட்டு மொத்தமாகவே நோக்கின் குறைந்தபட்சத் தீர்வுக்குக் கூட பேரினவாத ராணுவ் ஒடுக்கு முறையை விரும்பும் சக்திகள் சகல முனைகளிலும் வழி விட்டுக் கொடுப்பதாக இல்லை என்பது புலனாகிறது. எனவே சமாதானத்திற்கான இடத்தைச் சென்றடைவதற்கு மேலும் அதிக தூரம் செல்ல வேண்டியே உள்ளது. அதற்கு உள்ள ஒரே வழி நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் அனைவரும் அணிதிரண்டு நியாயமான கோரிக்கையை எழுப்புவதுதான். தேர்தல் வாக்குறுதிகளை நம்பி அதன் பின்னால் சென்று மீண்டும் மீண்டும் ஏமாறுவதைக் கைவிட்டு வெகுஜன எழுச்சி ஒன்றில் இறங்க வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்துள்ளது. அது யுத்தத்தை நிறுத்து! பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுகாண்! அதன் மூலம் சமாதானத்தை நிலைநாட்டு என்பதாகவே அமைய வேண்டும். அதற்கான வெகுஜன எழுச்சிப் பாதையும் மக்களை அணிதிரளச் செய்வதே நேர்மையான அரசியல் சக்திகளது இன்றைய பொறுப்பும் கடமையுமாகும்.





புதிய இடதுசாரி முன்னணி கொழும்பில் நடாத்திய மேதினக் கூட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் உரையாற்றுவதையும், கூட்ட மேடையில் இடமிருந்து முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் முஜிபர் ரஹ்மான், புதிய ஜனநாயகக் கட்சித் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா, நவசமசமாஜக் கட்சியின் லீனஸ் ஜயத்திலக்க, தேசிய ஜனநாயக இயக்கச் செயலாளர் பற்றிக் பெர்னாண்டோ ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு ... கிராபிக் (பிரை) லிமிட், 98, விவேகானந்த மேடு கொழும்பு 13.